# தென்றல்

காற்று : 02 சுகந்தம் : 03 (ஆடி - புரட்டாதி) 2009



50/=

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை

மட்டு நகரில்.....


வெனிலா ஐஸ்கிறீம், ஜெலி ஐஸ் கிறீம், புறூட் சலட் ஐஸ்கிறீம், பலூதா, மிக்ஸ் புறூட், அப்பிள் ஜூஸ், விளாம்பழ ஜூஸ், கட்லட் வகைகள்

**போன்றவைகளை ஒரே கூரையின் கீழ் தெரிவு செய்து கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.**

# BomBay Sweet House



# & Cool Bar





56, Main Street, Batticaloa.

Tel: 065-2246271



**மட்டுநகரில்......**

**சகலவிதமான போன் வகைகளையும், போன் உதிரிப்பாகங்களையும், போன் கார்ட் வகைகளையும் ஒரே கூரையின் கீழ் தெரிவு செய்து கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்,**

# The Phone Shop



No. 20E, Central Road
Batticaloa.
Tel :- 077-9001900



F/0001

# தென்றல்
# THENDRAL

34/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே : 077 - 6983597

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
திருமதி.சிறிதேவி சங்கர்
திரு.கே.வாமதேவன்
திருமதி.கவிதா.கிருபாகரன்
திரு.ஆ.அரசரெத்தினம்

**ஆலோசகர்**
இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

**ஓவியம்**
சி.குகன்

**கணணி வடிவமைப்பு**
அ.ஜெயலக்ஸ்மி


## உதவி புரிவீர்!

தென்றலின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றான மாணவர்களை மையப்படுத்திக் கருத்தரங்கை நடாத்துதல் என்ற அடிப்படையில் இவ்வாண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களுக்கு விஷேட கருத்தரங்கை நடத்தினோம்.

இக் கருத்தரங்கு பல்வேறு வகையில் மாணவர்களுக்கு பிரயோசனம் மிக்க தாக அமைந்தது.

வெறுமனே விளையாட்டு என்று பொழுது போக்குக்காக பணத்தைச் செலவிடுவதை விடுத்து எமது எதிர்காலச் சந்ததியினரான மாணவச் செல்வங்களை மையப் படுத்தி புலமைப்பரிசில் கருத்தரங்கை மாவட்டத்தின் முதன்மையான இரு ஆசான்களைக் கொண்டு நடத்தினோம்.

இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளாத எமது மாணவச் செல்வங்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு இவ் வினாப்பத்திரத்தை எமது "தென்றல்" இதழோடு இலவசமாக வழங்குகிறோம்.

அத்தோடு எதிர்வரும் க.பொ.த [சாதாரணதரம்]

பரீட்சையை மையப்படுத்தி கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கையும், உங்கள் அபிமான "தென்றல்" தேசிய பல்சுவை குடும்பச் சஞ்சிகை நடாத்த திட்டமிட்டுள்ளது.

இம் முயற்சிக்கு பல்வேறு தரப்பினரதும் உதவிகளை "தென்றல்" நாடி நிற்கின்றது.

வெறுமனே கேளிக்கை, களியாட்டம்.... எனப் பணத்தை வீண் விரயம் செய்யாது தென்றலின் கல்விப் பணிக்கு உங்களால் இயன்ற உதவிகளை வழங்கி ஊக்கப்படுத்துமாறு தனவந்தர்களை அன்பாக வேண்டி நிற்கின்றோம்.

**என்றென்றும் அன்புடன்**
**அசிரியர்**

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 250/= | US$10 |
| ஆயுள் கட்டணம் | 1000/= | US$ 50 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

# நல்ல பள்ளிகள் பத்து (Ten Good Schools)

பேராசிரியர் மா.செல்வராஜா -கல்வி, பிள்ளை நலத்துறை-

பள்ளிகள் மூலமே ஒரு சமூகமும், ஒரு நாடும் ஏன் உலகமே உருவாக்கப்படுகின்றது. இங்கு நடைமுறைப்படுத்தப்படும் கலைத் திட்டம் அல்லது பாடத்திட்டம் ஒரு பிள்ளையை விரும்பியவாறு உருவாக்க உதவியாக அமையும். அத்தகைய ஆற்றல் பள்ளிகளில் அமுலாக்கப்படும் கலைத்திட்டத்திற்கு உண்டு. அது மட்டுமல்ல அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களிலும் அது தங்கியுள்ளது. எத்தனை கல்வி நிறுவனங்கள் இருந்தாலும் ஆசிரியரின் பங்கு எங்கும் பிரதான இடம் பெறும். ஆசிரியர்களிலும் பல வகை ஆசிரியர்கள் மாணவனது மூளைக்கும், மனத்திற்கும், கைகளுக்கும் மட்டும் பயிற்சியளிப்பவராகக் கொள்ள முடியாது. சில ஆசிரியர்கள் மாணவனது ஆத்மாவுக்கே பயிற்சியளிக்கவும் கூடும். இத்தகைய ஆசிரியர்களை உலக வரலாறுகள் கண்டுள்ளது.

நாம் இக்கட்டுரைக்கு எடுத்துக்கொள்ளப்படும் விடயம் அந்தளவுக்கு ஒன்றும் பெரிய விடயம் அன்று. அது ஒரு சாதாரண விடயம் தான். ஆனால் சற்று வித்தியாசமானதும், பயன்பல தந்ததுமாகும். இலங்கை அரசாங்கம் மாணவர்களுக்காக நடாத்தும் 10300 பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பத்துப் பாடசாலைகள் அல்ல. இவை ஒரு புதிய பாடசாலை என்பது பொருத்தமானது. இது யாருக்கான பாடசாலை என்றால் அதுதான் ஒரு சூழலில் உள்ள பள்ளிகளுக்கான முறைசார்ந்த அரசாங்க பாடசாலைகள் அல்ல என்பதையும் கவனித்தல் வேண்டும். ஆனால் இந்தப் பத்துப் பாடசாலைகளும் காலாண்டு காலப்பாடசாலைகளே. அதுவும் தாய்மாருக்காக, பெண்களுக்காக நடாத்தப்பட்டவை. சாதாரண கிராமியத் தாய்மார்களுக்காக நடாத்தப்பட்டவை, குழந்தைகளது மேம்பாட்டையே குவியமாக்க (Focus) கொண்டவை.

இத்தகைய பாடசாலைகளை மட்டக்களப்பு லயன்ஸ் கழகம் சென்ற வருடம் அதாவது 2008 ஏப்ரல் மாதமளவில் ஆரம்பித்தது. இதற்கான நிதியாக 10 மில்லியன் கனடிய நாட்டு CIDA நிறுவனம் வழங்கியது. இதன் இணைப்பாளராக மட்டக்களப்பு லயன்ஸ் கழக உறுப்பினரான பேராசிரியர் மா.செல்வராஜா செயற்பட்டார். இப் பாடசாலைகளுக்கான சிந்தனைகளையும் அமுல்படுத்

தும் உத்திகளையும் வழங்குவதே அவரது பிரதான பணியாக விளங்கியது.

**பள்ளிகள் நடாத்தப்பட்ட கிராமங்கள்**

சுனாமி மற்றும் யுத்தம் என்பனவற்றால் பாதிப்புக்குள்ளான கிராமங்கள் பிரதேச செயலாளர்களின் ஆலோசனை பெறப்பட்டுத் தெரிவு செய்யப்பட்டன. அக்கிராமங்கள் கீழே தரப்பட்டுள்ளன. முனைக்காடு, முதலைக்குடா, மகிழடித்தீவு, நாவற்காடு, இலுப்படிச்சேனை, கரையாக்கன்தீவு, என்ற ஆறு கிராமங்களும் வாவிக்கு மேற்கேயுள்ள கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டன. கல்லடி வேலூர், ஆரையம்பதி செல்வாநகர், கிரான்குளம், தாழங்குடா என்னும் நான்கு கிராமங்களும் கரையோரக் கிராமங்களாக, கிழக்குப்புறமாகவும் தெரிவு செய்யப்பட்டன. இவையனைத்தும் கல்வி, பொருளாதாரம், சமூகத்தரம் என்பனவற்றில் தாழ்ந்த நிலையிலேயே காணப்பட்டன.

இக்கிராமங்கள் அனைத்தும் நான்குபிரதேச செயலகங்களுக்கு உட்பட்டவையாகும். வவுணதீவு, பட்டிப்பளை, மண்முனைப்பற்று, மண்முனை வடக்கு என்பவை நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளுமாகும்.

**பள்ளி மாணவர்களின் தெரிவு**

மரபுரீதியான பள்ளி மாணவர்களாக இப்பள்ளி மாணவர்கள் தெரிவு செய்யப் படவில்லை. இவர்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாகியிருக்க வேண்டும், யுத்தத்தினால் பாதிப்புக் குள்ளாகியிருக்க வேண்டும் அல்லது சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப் பட்டவர்களாக இருக்க வேண்டும். அதுமட்டுமன்றி அவர்கள் அனைவரும் பெண்களாகவும் இருக்க வேண்டும். இவை மட்டும் தெரிவுக்குக் காரணமாக இருக்க முடியாது. அவர்கள் 1-6 வயது வரையுள்ள குழந்தைகளைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். எதிர்காலத் தாய்மார்கள் என்ற வகையில் இம் மாணவர்களிடையே கர்ப்பிணித்தாய் மார்களும் சிலர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஒவ்வொரு பள்ளிக்கும் 50 தாய்மார்கள் மட்டுமே தெரிவாகினர். மொத்தமாக பத்துப் பள்ளிகளுக்கும் 500 தாய்மார்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**பாடத்திட்டம் (கலைத்திட்டம்)**

இப்பள்ளிக்கான பாடத்திட்டம் மிகவும் சிறப்பான வகையில் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கலைத் திட்டம். சமூகத்திற்கான, அதன் தேவைக்காக இருக்க வேண்டும்

என்பதால் சகல உள்ளடக்கங்களும் பிள்ளையை மையமாகக் கொண்டே தயாரிக்கப்பட்டன. குழந்தை வளர்ப்பில் குடும்பத்தின் முக்கியத் துவம், பெற்றார் - பிள்ளை தொடர்பு, பிள்ளை விருத்தி, பிள்ளையின் பாதுகாப்பு, நல்ல பழக்கவழக்கங் களைப் பிள்ளைகளிடையே வளர்த்தல், பிள்ளையின் உரிமை, பிள்ளைகளிடம் நல்ல விழுமியங்க ளைக் கட்டியெழுப்பல், பிள்ளையின் தேவைகள், குடும்பத்தை நடாத்து வதற்கான வரவு செலவுத் திட்ட மொன்றைத் தயாரித்தல், பிள்ளைகளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதற்கான வீட்டுச் சூழலைக் கவர்ச்சியானதாக ஆக்குதல், அயலவர்களுடன் நல்ல தொடர்பைப் பேணல், போன்ற விடயங்கள் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந் தன. கைத்திறன்களை வளர்ப்பதற் கும், வீட்டுத் தோட்டம் ஒன்றை உருவாக்குவதற்கும், கூட இப்பாடத் திட்டத்தில் விடயங்கள் சேர்க்கப் பட்டிருந்தன. குறைந்த வகையில் போசாக்குள்ள உணவு வகைகளைத் தயாரிப்பதற்கும் செயல்முறை வகுப்புக்கள் இப்பாடத்திட்டத்தில் இடம் பெற்றன.

**பள்ளியில் கற்பிக்கும் முறைகள்**

இப்பள்ளிகள் பாரம்பரியமாக நடைபெறும் முறையில் இடம் பெறவில்லை. பாடசாலைகளில் அல்லது கிராம சபைக் கட்டிடங்களி லேயே இப் பள்ளிகள் நடத்தப்பட்டன. பள்ளி நேரம் பிற்பகல் 2.00 மணியிலிருந்து 5.00 மணிவரையுள்ள மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமைந்தது. ஒரு மாதத்திற்கு சராசரி இரண்டு முறைகள் வீதம் ஏறக்குறைய 20 நாட்களுக்கு இப்பள்ளி நடாத்தப் பட்டது. மாணவர்கள் அனைவரும் ஆர்வமாக பங்கு கொள்ளும் வகையில் கற்பித்தல் முறைகள் பின்பற்றப்பட்டன. முறைசாராத வகையான விரிவுரைகள், குழுச் செயற்பாடுகள், குழுக்கலந்துரை யாடல்களின் இறுதியில் குழுத் தலைவர்களால் எடுத்துரைப்புக்கள், திறன் விருத்திச் செயற்பாடுகள், உதாரணமாகத் தையல், கைவினை, களி மற்றும் ஓலைகள் மூலம் செய்யக்கூடிய பொருட்களைச் செய்தல், போஷாக்கான, செலவு குறைந்த உணவுகளைத் தயாரித்தல் என்பன போன்ற பல முறைகள் இத்தாய்மார் பள்ளிகளில் கற்பித்தல் முறைகளாக அமைந்தன. சில எண்ணக்கரு சார்ந்த விடயங்களுக்கு வளவாளர்கள் வரவழைக்கப்பட்டனர்.

**வளவாளர்கள்/ஆசிரியர்கள்**

மரபு சார்ந்த ஆசிரியர்களல் லாது இப்பாடசாலைக்கான ஆசிரியர்கள் விஷேட பயிற்சி பெற்ற

ஏறக்குறைய 05 பெண்பால் வளவாளர்களும், இரண்டு ஆண்பால் விரிவுரையாளர்களும் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றனர். இவர்கள் பேராசிரியர் செல்வராஜா அவர்களிடம் பல்வகைப் பயிற்சிகளை ஏற்கனவே பெற்றவர்களாக இருந்தனர். எனவே குறிப்பிட்ட இப் பத்துப் பாடசாலைக ளதும் செயற்பாடுகளை நடத்துவதற் கான வளவாளர் பயிற்சிகளும் 10 நாட்களுக்கு லயன்ஸ் கழகத்தில் இடம் பெற்றன.

இதுவன்றி ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு பெண்கள்வீதம் மொத்தம் 20 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான விஷேட பாடத்திட்டமும் பயிற்சி முனைப்பும் வடிவமைக்கப்பட்டு 10 நாட்கள் வதிவிடப்பயிற்சி வழங்கப்பட்டது. பிற்பகல் வேளை களில் தாய்மார் பள்ளிகளில் கற்பிக்கப் படும் பாடங்கள் மற்றும் பயிற்சிகள் எந்தளவுக்கு வீடுகளில் பின்பற்றப் படுகின்றன என்று அவதானிப்பதற்காக விஷேட பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டன. இவர்கள் 500 தாய்மார்களின் வீடுகளுக்குச் சென்று குறிப்பிட்ட நேர அளவு அவர்களு டைய வீடுகளில் தாய்மார் மற்றும் பிள்ளைகள், உறவினர்களுடன் கலந்துரையாடும் ஒழுங்குகளும், திட்டங்கள், நேர அட்டவணை என்பன வும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இவர்கள் மாதாந்த அறிக்கை யொன்றை இணைப்பாளருக்கு கொடுக்க வேண்டும். மாதம் ஒருமுறை வளவாளர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் இடம் பெறும். இதன் மூலம் பிரச்சினைகள் கலந்துரையாடப்படும். மேற்குறிப்பிட்ட 20 பேரும் மாதச்சம்பள அடிப்படையில் செயற்படும் கள உதவியாளர்களாக இயங்கினர்.

இக்கள உதவியாளர்கள் வீடுகளுக்குச் சென்று அவதானத்தில் ஈடுபட வேண்டும். தாய்மார்களது செயற்பாடுகளை அவதானிக்க வேண்டும். இந்த வகையில் இவர்கள் நடமாடும் ஆசிரியர்களாவர் (Moving Teachers). பயிற்சி வகுப்புக்களில் தாய்மாருக்கு போதிக்கப்பட்டுள்ள விடயங்களை இவர்கள் மேலும் தெளிவுபடுத்த வேண்டும். தாய்மார் பள்ளியில் பயிலும் விடயங்கள் வீடுகளில் முறையாகப் பின்பற்றப் படுவதை உறுதி செய்ய வேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்கும் விதம் பற்றித் தாய்மார்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். குழந்தைகள் வீடுகளில் மகிழ்ச்சியாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். தாய்மார் கள் வீடுகளைச் சுத்தமாகவும் வளவுகள் சுற்றுப்புறங்களைச் சுத்தமாகவும் வைத்திருக்கின்றார்களா என்பதையும் அவதானித்து உறுதிப் படுத்த வேண்டும்.

வீடுகளில் மகிழ்ச்சியான சூழல் நிலவுவதற்கு வேண்டிய

உதவிகள் ஆலோசனைகள் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் இவர்கள் எதிர்பார்க்கப்பட்டனர். இப்பள்ளிகளின் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுவதை உறுதிப் படுத்த இணைப்பாளரது மேற்பார்வை ஒழுங்கான இடைவெளியில் இடம் பெற்றது. லயன்ஸ் கழக உறுப்பினர்களும் பாடசாலைகளுக்கும், வீடுகளுக்கும் தரிசிப்புக்களை மேற்கொண்டனர். கிராம சேவகர்கள் அவ்வூர் பாடசாலை அதிபர்கள் மற்றும் சீடா நிறுவன அதிகாரிகளும் கூடச் சந்தர்ப்பம் கிடைத்த போது தரிசிப்புக் களை மேற்கொண்டனர்.

**செயற்திட்ட முகாமை**

நிதிமுகாமை, செயற்திட்டம் என்பன சிறப்பாக நடைபெறுவதற்காக ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் பிற்பகலில் லயன்ஸ் கழகத்தின் மீளாய்வுக் குழுக்கூட்டம் நடை பெற்றது. நிதி மற்றும் செயற்பாடுகள் என்பன ஆராயப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் தாய்மார் பள்ளிச் செயற்திட்டம் பயன்தரும் வகையில் அமுலாக்கு வதற்கு வாய்ப்பாயிற்று.

**விளைவுகள்**

- இப்பாடசாலைகளால் பல நல்ல பயன்கள் ஏற்பட்டன. 20 யுவதிகள் கிராமங்களில் செயற்படுவதற்கும், தலைமைத்துவத்தை வழங்கு வதற்கும் தயாராகினர்.
- 500 தாய்மார்கள் குழந்தைகள் பராமரிப்பில் சிறப்பாக பயிற்றப்பட்டனர்.
- கிராமச் சுகாதாரம், குடும்ப உறவு, போஷாக்கு என்பவற்றில் 500 தாய்மார்கள் சிறப்பான பயிற்சிகளைப் பெற்றனர்.
- 500 தாய்மார்கள் தமது வீடுகளில் 500 வீட்டுத்தோட்டங்களை ஏற்படுத்தியதுடன் அக்கிராமம் முழுவதற்கும் ஓர் உதாரணத்தை ஏற்படுத்தினர். இதற்கான விஷேட நிபுணத்துவ உதவியும் பெறப்பட்டது.
- 500 தாய்மார்களுக்கும் வீட்டுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்கப் பெற்றன. குழந்தைகளுக்குத் தேவையான பொருட்களும் வழங்கப்பட்டன. உதாரணமாக பிள்ளைகளுக்குத் தேவையான சிறிய கதிரை, மேசை, விளையாட்டுப் பொருட்கள், பராமரிப்புக்கான பொருட்கள் என்பன இச் செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டன.
- எல்லாவற்றுக்கும் மேலாகத் தாய் தந்தை அனைவரிடமும் குறிப்பிடும்படியான மனப்பாங்கு மாற்றம் பிள்ளைகள் தொடர்பாக ஏற்பட்டது. இது ஒரு முக்கிய பயனாக கொள்ளப்பட வேண்டியதாகும்.
- பாடசாலைகள், முன்பள்ளி என்பவற்றின் நிகழ்வுகளில் பங்குபற்றல்

அதிகரித்தது. இதனால் கிராமங் களில் கல்விக்கான ஓர் உந்து விசை தோற்றுவிக்கப்பட்டது.

தாய்மார் தங்களுக்குக் கிடைத்த அனுபவநிலையை மற்றவர்களுக் கும் பரிமாறும் நிலையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனால் ஒருவரிடமி ருந்து அனுபவம், அறிவு என்பன சூழலில் உள்ளவர்களுக்கும் கிடைக்கும் நிலை உருவாயிற்று.

- ஒரு தாய் இன்னொரு தாயைத் தத்தெடுத்துப் பயிற்றினால் புதியன பற்றி வீட்டின் உள்ளேயும் வெளியேயும் சுத்தம் அதிகரித்துக் காணப்படும்.
- குடும்பத்திறனுள்ளவர்கள் ஒருவரிடம் மற்றொருவர் அன்னி யோன்னியமாகப் பழகும் நிலை யும் முரண்பாடுகள் குறையும் நிலையும் அவதானிக்கப்பட்டன. கணவன் மனைவி இருவரும் தமது பிள்ளைகளுக்காகச் செயற் பட முன் வந்தமையினால் அவர்க ளது உறவு உடன்பாடான முறை யில் வலுவடைந்தமையும் பிள்ளைகளுக்காக வங்கியில் சேமிப்புக்களை ஆரம்பிக்கும் நிலையும் உருவாகியது.
- பிள்ளைகளின் விடயங்களில் தந்தையரும் ஈடுபடும் நிலை உருவாகியது. தந்தையரின் மனப்பாங்கில் மாற்றத்தைத் தோற்றுவிக்கும் நிலை ஏற்பட்டது.
- வீடுகளில் மனைவி, கணவன், பிள்ளைகளுக்கு இடையேயான சண்டைசச்சரவு குறையலாகின.
- சத்துள்ள உணவு வகைகளை நுகரும் நிலை அதிகரித்தது. இதனால் பிள்ளைகளது ஆரோக் கியமும் சிறப்படைந்தது.
- மேலும் பத்துக் கிராமங்களிலும் தாய்மார்கள் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பதிவு செய்யப் பட்டதுடன் அவர்களது சங்கத்துக் கான ஒரு வைப்புப் பணமும் செயற்திட்டம் மூலம் வழங்கப் பட்டது. இச்சங்கங்கள், சிரம தானம், ஏழைக்குழந்தை களது கல்விக்கு உதவுதல், சிறுகைத் தொழில் முயற்சிகளை ஆரம்பித் தல், அதற்குப் பிறருக்கு உதவுதல், ஞாயிறு வகுப்புக் களை நடாத்துதல் போன்ற இன்னோரன்ன பணிகளில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது.
- தேனி வளர்ப்பு, காளான் வளர்ப்பு, வல்லாரை வளர்ப்பு போன்றன அவர்களால் ஆரம்பிக்கப்பட்டமை இதன் சிறப்பான செயற்பாடுகளில் சிலவாகும்.

இக்கிராமங்களில் ஆரம்பிக் கப்பட்ட சங்கங்கள் நன்று செயற் படுவதற்காகவும் விஷேட பயிற்சிகள் வழங்கப்பட்டன. இச்சங்கங்கள் மேற் பார்வை செய்து ஒரு வருடம் வரை கண்காணிக்கும் ஒழுங்கு ஒன்றும்

ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் இப்பாடசாலைகளின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் பேண வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. எவ்வாறாயினும் பக்கத்துக் கிராமங்களிலும் குழந்தை வளர்ப்பு அவர்களது பராமரிப்பு மற்றும் அவர்களது கல்வி பற்றி ஒரு குறிப்பிடத்தக்க விழிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பது மறக்க முடியாதது. இது தொடர்பாக அண்மையில் கொழும்பில் CIDA வினால் ஒழுங்கு செய்யப்பட்ட பொருட்காட்சியில் இப்பள்ளிகள் பங்கு பற்றிப் பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான பள்ளிகளை பல தொண்டர் நிறுவனங்களும் நடத்தினால் குழந்தை வளர்ப்பு தொடர்பாக ஒரு நல்ல விளக்கத்தை தாய்மார் பெறவாய்ப்புண்டு. இத்தகைய பள்ளிகள் நூற்றுக்கணக்கான கிராமங்களுக்குத் தேவையாக உள்ளன. இப்பத்துப் பள்ளிகளும் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் செய்யப்பட்ட பயனுள்ள முதலீடாக விளங்குவதை அவற்றில் கிடைத்த பயன்கள் தெளிவு படுத்துகின்றன.

**நன்றி - கிழக்கொளி**

உங்கள் அபிமான தென்றலில் ஊர் தொடர்பான விபரங்கள் இடம் பெற வேண்டுமா?

நீங்கள் செய்ய வேண்டியது?

புள்ஸ்கப் தாளில் 05 பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி, ஊரின் முக்கிய இடங்களைக் காட்டும் மூன்று படங்களையும் அனுப்பி வைப்பதுதான். தென்றல் அதனை நிட்சயம் உள்வாங்கிக் கொள்ளும்.

–ஆசிரியர்–

ஆரையம்பதியில் 22 கரட்
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக்
கொள்ள இன்றே
விஜயம் செய்யுங்கள்.


அபிராமி ஜுவலரி



பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொலைபேசி : 060 - 2644944
077 - 6506329
AD/0008

மட்டு நகரில்... தரமான ஜப்பானிய
உதிரிப்பாகங்களுடனான நீண்ட
பாவனையுடைய YAMAHA மோட்டார்
சைக்கிள்களை பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்.

YAMAHA Plaza
230, Trinco Road, Batticaloa.
Tel/Fax : 065-2224821
Mobile : 077-3268484



H.R.D(Co.Op) வங்கியூடாக
தவணைக் கொடுப்பனவு முறையிலும்
வழங்கப்படும்
AD/0004



மட்டக்களப்பில்....
அழகிய 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

சுபாஜினி ஜுவலர்ஸ்

51, பிரதான வீதி
மட்டக்களப்பு
தொலைபேசி : 065.2224863
AD/0005

# தமிழ் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் வைரவர் மடை

எஸ். எதிர்மனசிங்கம்
முன்னாள் கலாசார உதவிப்பணிப்பாளர்

மட்டக்களப்பு மாநில சைவ மக்களுடைய பண்பாட்டுப் பாரம்பரிய சடங்கு முறைகளில் வைரவர் மடையும் முக்கியம் பெறுகிறது. சர்க்கரையமுது, தண்ணீர் சோற்றுப் பள்ளையம் ஆகியனவும் மக்களால் செய்யப்பட்டு வந்த சமயச் சடங்கு களுள் அடங்கும். வயிரவர் மடை வீடுகளிலும் ஆலயங்களிலும் வேறுவேறாகச் செய்யப்படுகின்றன.

முதற்கண் வீடுகளில் செய்யப்படும் வயிரவர் பூசைகளைப் பார்க்கலாம். அநேகமாக கிராமப் புறங்களில் ஒவ்வொரு வீடுகளிலும் 'வயிரவர் பந்தல்' அமைந்திருக்கும். நான்கு கால்கள் கொண்டதாகவும் சதுரமாகவும் மேற்புறம் பந்தல் வடிவிலும் அமைக்கப்பட்டிருக்கும். அப்பந்தலின் உட்புறம் வயிரவருடைய சூலம் இருக்கும். ஆண்டு தோறும் வைகாசி மாதமளவில் இவ் வைரவர் சடங்கு நடைபெறும். சடங்கிற்குரிய தினம் வருகின்றதென வீட்டார் அறிந்ததும் சொந்தக்காரருக்கு அத்தினத்தில் வரும் படி சொல்லியனுப்பி விட்டு சடங்கிற்கான வேலைகளைக் கவனிப்பார். வைரவர் பந்தலை தென்னங்குருத்துக்களாலும், கமுகம் பாளைகளாலும் சோடனை செய்வர். வயிரவருக்குப் படைப்பதற்கு 'ரொட்டி' சுடுவதற்காக உறவுப் பெண்களை அழைத்து மா இடிப்பர். மேலும் படையலுக்காக மொந்தன் வாழைக் குலைகளை வெட்டி மடுவில் பழுக்கப் போடுவர். பின்னர் இரவில் நடைபெறும் சடங்கிற்காக மாலையிலிருந்து ரொட்டிகளைச் சுடுவர். இச் சமயம் வயிரவருக்கு உகந்ததெனக் "கஞ்சா" ரொட்டியும் இரண்டு மூன்று சுடுவர். பின்னர் எல்லாவற்றையும் பந்தலில் படைத்து கற்பூரம் கொழுத்தி வயிரவர் காவியம் பாடி பூசை செய்வர். வயிரவருக்கொன படிக்கப்படும் பாடல்கள் மிகவும் சுவாரஸ்சியமாக இருக்கும். காவல் தெய்வமாகவே மக்கள் வயிரவரை வழிபடுகின்றனர். ஒவ்வொரு வீட்டையும் காவல் செய்கின்ற தெய்வம் வயிரவர் தான் என்கிற நம்பிக்கை மக்களிடம் குடி கொண்டிருந்தது. பூசை முடிந்ததும் ரொட்டியும் மொந்தன் வாழைப் பழத்தையும் எல்லோருக்கும் கொடுத்து உண்டு மகிழ்வர். கஞ்சா ரொட்டியை மட்டும் சிறு துண்டுகளாக உடைத்து பெரியவர்கள் மாத்திரம்

சாப்பிடுவர். இவ்விதமான வயிரவர் சடங்கு ஆண்டுதோறும் கிராமப்புற வீடுகளில் நடைபெறும். இன்று இச்சடங்கு அருகிப் போய்கொண்டிருக்கிறது.

இனி ஆலயங்களில் நடைபெறும் வயிரவர் சடங்குகளை பற்றிப் பார்க்கலாம். சகல ஆலயங்களிலும் வயிரவருக்கெனச் சிறுகோயில் அமைந்திருக்கும். ஆலயத்தின் வருடாந்த உற்சவங்கள் நிறைவு பெற்ற மூன்றாம் நாள் பூச்சடங்கு எனும் வயிரவர் பூசை நடைபெறும். இச் சடங்கிலும் உப்பு சேர்க்காத ரொட்டிகள் சுட்டு வைத்து வயிரவருக்கு வடைமாலை அணிவித்து பூசைகள் செய்வர். இதில் மக்கள் மிக மகிழ்ச்சியோடு கலந்து கொள்வர். இங்கும் வயிரவருக்குரிய காவியம் பாடப்படும். சிறு தெய்வ வழிபாட்டில் வயிரவர் முக்கிய தெய்வமாகக் கருதப்படுகின்றார். தனியான கோயில்கள் பல வயிரவருக்கு அமைக்கப்பட்டுள்ளன. நரசிங்க வயிரவர், கபால வயிரவர், சுடலை வயிரவர், காலை வயிரவர், உக்கிர வயிரவர் எனப் பல வயிரவர் கோயில்கள் உள்ளன. இதுபற்றி சிவநெறிச் செல்வர் சைவ நன்மணி இரா. மயில்வாகனம் அவர்கள் எழுதிய **"வைரவர் மான்மியம்"** என்னும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள வயிரவர் கோயில்கள் பற்றி அந்நூலில் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

வயிரவர் கோயில்களில் நடைபெறும் சடங்குகள் வித்தியாசமானவையாகவும், சிறப்பானவையாகவும் உள்ளன. ஆண்டு தோறும் வயிரவர் சடங்கு வரும் போது பூசாரிமாரைக் கொண்டே பூசைகள் நடத்தப்படும். சில கோயில்களில் தெய்வம் ஆடி கட்டுச் சொல்லும் நிகழ்ச்சி நடைபெறும். கட்டுக் கேட்பதற்காக ஏராளமான பக்தர்கள் கோயிலுக்குச் செல்வர். நிறைவு நாள் அன்று பலி கொடுக்கப்படும். இரண்டு விதமான பலி கொடுக்கப்படுகின்றது. கோழியுடைய கழுத்தைத் திருகி இரத்தத்தைத் தெய்வம் உறிஞ்சிக் குடிப்பது. மற்றையது **'நரபலி'** எனப்படும். பூசாரி (தலைகட்டாடி) தனது கையை வாளால் சீவி உதிரத்தை தெய்வத்திற்கு உறிஞ்சிக் குடிப்பதற்கு வழங்குவார். இந் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக பெருந்திரளான மக்கள் குழுமியிருப்பர். ஆலயங்களில் நடைபெறும் சடங்குகள் பக்தர்களால் மிகவும் பரவசத்திற்கு இட்டுச் செல்லும். தெய்வம் ஆடிக் கட்டுச் சொல்லும் போது சிறுவர்களை குறுக்காகச் செல்ல விடாமல் பெரியவர்கள் பார்த்துக் கொள்வர். தெய்வங்கள் சந்தோஷமடைந்ததும் தங்களுக்கு சாட்டை அடி கொடுக்கும் படி சாட்டை கயிற்றைக் கொண்டுவந்து நல்ல திடகாத்திரமானவர்களிடம் கொடுக்

கும். அதை வாங்கி சாட்டை அடி கொடுக்க வேண்டும். அப்போது தெய்வம் திருப்தியடைந்தால் ஆலயத்திற்குள் ஓடிச் சென்று மடையிலிருந்து வாழைப்பழம், ரொட்டி, பூ, முதலியவற்றைக் கொண்டு வந்து அவருக்குக் கொடுத்து தனது சந்தோஷத்தை வெளிப்படுத் தும். இவ்விதம் சடங்குகள் நிறைவு பெறும். வயிரவர் காவியப்பாடல் அடிகள் சிலவற்றை நோக்கலாம்.

**வயிரவர் அகவல்**

**காப்பு**

"சீர்புகழ் வயிரவர் செந்தமிழுரைக்க
கார் புகழ் மேனி கணபதியருளே!"

**நூல்**

"ஆதி பராபரி அருளிய நுதல்விழி
சோதி போலெழுந்து சுடரொளியாகி
வீதியிலெழுப்பி விசும்பெலங்கடந்து
ஓதிய மந்திர உச்சாடனமாய்
ஓங்காரங் கொண்டொருமுகமாகி
ஆங்காரங் கொண்ட மரகமாகி
அக்கினி சொருபனெல் பல கதிராய்
விக்கினத் தீர்க்கும் விறும வயிரவர்
அப்பமுமவலு மாலங்களையும்
செப்பிய மாங்கனி திகழ் தட்டுறட்டியும்
தேங்கதலிப் பழம் செப்பிய பலாப்பழம்
அத்தனையெல்லா மருந்திய வயிரவா
ஐயுங்கிலியு மகோர வயிரவா
சவ்வுங் கிலியுங் சங்கார வயிரவா
சிறியுங் கிலியும் ஏறு வயிரவா
மௌவுங் கிலியும் மான வயிரவா
முச்சூ லவயிரவா முக்கணீ சுபரா
அக்கினி வயிரவா ஆனந்த வயிரவா
சத்திடோடருள் புரி தற்பரனாகிப்
பாம் பெறும் பணிந்த பராபர
வஸ்துவாய்ச்
சாம்பலு மணிந்து, தலைடோடேந்திச்
சுடலையில் நின்று சுடலை
காத்தவனே......"

என இவ்வகவல் தொடர்ந்து செல்லும். இதனை மண்டூர் மணியப் பூசாரியார் இயற்றியுள்ளார்.

மட்டக்களப்பு விடத்தல்முனை கண்ணகை அம்மன் ஆலயத்தில் அமர்ந்துள்ள ஆதி வயிரவர் பற்றி முன்னாள் ஆலய தர்ம கர்த்தா திரு. க. பொன்னுத்துரை அவர்கள் இயற்றிய காவியப் பாடல் ஒன்றினையும் பார்க்கலாம்.

"ஓது மோங்காரமுந் கோண சட் கோண
ஒளியாகி வெளியாகி உருவாகி நின்றே
மாது சுந்தர காளியுடன் நடனமாடி வரு
வயிரவரென வந்து உதிப்பவனு நீயே
பாதுகாத் துலகமதிலெங்கும் பரந்து
பல பேர் இடும் பூசை வேள்விகளுக்கு
வந்து
காதுதனிற் குண்டலம் அணிந்துலகை
யாளும்
கருணை பெறு கைலைமலை வயிர
வரும் நீயே"

இவ்விதம் நமது பண்பாட்டுப் பாரம்பரியத்தில், சர்க்கரையமுது தண்ணிச்சோற்றுப் பள்ளையம் ஆகிய சடங்கு முறைகளும் தனித்தனியாக ஆராயப்படவேண்டியவையாகும்.

# Headway



School of Languages (Pvt) LTD

**Prepare for your IELTS Exam at Headway**

Headway
School of Languages, Arasady, Batticaloa.
T.P: 065.2224042

AD/0006


மட்டு நகரில்.........

சகல விதமான மருந்து வகைகள், உணவு வகைகள், சிறு பிள்ளைகளுக்குத் தேவையான பால்மா வகைகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றை ஓரே கூரையின் கீழ் தெரிவு செய்து கொள்ள விஜயம் செய்ய வேண்டிய ஓரே இடம்

# New Batticaloa Medical's




NO:18, BAR ROAD
BATTICALOA.
TEL: 065 - 2224400
FAX: 065 - 2223515



AD/0007

# கல்குடா கல்வி வலயத்தில் பல சாதனைகளைப் படைத்து வரும் செங்கலடி மத்திய கல்லூரி

கே. வாமதேவன் (J.P)
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



அ.சுகுமாரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
ஏறாவூர்ப்பற்று - 02



க.சிறிதரன்
வித்தியாலய அதிபர்



சி.சிறிதரன்
பிரதி அதிபர்

## ஆசிரியர் குழாம்



"கல்வி வாழ்வின் ஒளி" இது செங்கலடி மத்திய கல்லூரியின் தொனிப்பொருளாகும். அந்த வகையில் உதய சூரியன் கிழக்கிலிருந்து உதயமாகி வருகின்ற பொழுது அதன் ஒளி இந்தக் கல்லூரிக்கே விஷேசமான பிரகாசத்தை வழங்குகிறது எனலாம். இதற்கு ஆதாரமான காரணங்களும் உள்ளன.

மட்டக்களப்பு மாநகரிலிருந்து வடக்கே பதினாறு (16) கிலோ மீற்றர் தூரத்திலே கல்குடாத் தொகுதியின் நுழைவாசலின் முதல் கிராமமான ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரதேசத்திற்குட்பட்ட செங்கலடி சந்தியிலிருந்து வாழைச்சேனை பிரதான மார்க்கத்திலே இலங்கையின் முதலாவது சிவதொண்டன் நிலையத்தை அண்மித்ததுமாக அமைந்திருப்பது தான் இந்த செங்கலடி மத்திய கல்லூரியாகும்.

தற்போது இக் கல்லூரியின் அதிபராக, இதே கல்லூரியில் பிரதி அதிபராக பல வருடங்களாக இருந்து நிறைய அனுபவமுடைய க. சிறிதரன் 2005ம் ஆண்டிலிருந்து இப் பாடசாலையில் பௌதீக வளத்துடன் தேவைகள் பல இருக்கின்ற போதிலும், அவைகளை பட்டியலிட்டு அத்தேவைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடைய உதவிகளைப் பெற்று பெற்றோர்களிடம் வரிச்சுமைகளைச் சுமத்தாமல் தனது முகாமைத்துவ திறமையினாலும், தனது ஆளுமையினாலும் நலன் விரும்பிகள் போன்றவர்களையும் கவர்ந்திழுத்து இக் கல்லூரியின் பல தேவைகளில் பங்கு கொள்ள வைத்து சகல விடயங்களிலும் வெற்றியும், கலங்காத அதிபராகவும் செயற்பட்டு வருகின்றார். இதற்குக் காரணம் இன்று வரையிலே இப் பாடசாலையிலே 2170 மாணவர்கள் படிக்கிறார்கள். பிரதி அதிபராக சி. சிறிதரன் கடமையாற்றுகிறார்.

இந்த நிலையில் 2170 மாணவர்களையும், 90 ஆசிரியர்களையும் உள்ளடக்கிய இந்த மத்திய கல்லூரியிலே வருடாவருடம் பல தேவைகள் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இரவு பகல் பாராது பாடுபட்டு வருகின்ற அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், ஒழுக்கத்துடன் மாதா, பிதா, குரு, தெய்வம் என்பவைகளுக்கு மதிப்பளித்து கல்வி பயிலும் மாணவச் செல்வங்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், ஆகியோர்களுடைய ஒன்றுபட்ட செயற்பாடுகளின் வெற்றியினால் தான் இப்பாடசாலை கல்குடா கல்வி வலயத்திலேயே பல சாதனைகளைப் படைத்து வருகின்றது.

**தமிழ்த்தினப் போட்டி :** தமிழ்த் தினப்போட்டியிலேயும் தொடர்ந்து பல வருட காலமாக சாதனை படைத்து வரும் இக் கல்லூரி இம் முறையும் 1வது இடம் பெற்று 50.000/= பரிசும், 2ம் இடமாக 30.000/= பரிசுகளையும் பெற்றுள்ளது.

**எல்லே :**

அதேபோல பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியிலும் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கும் தகுதி பெற்றுள்ளது என்பதையும் குறிப்பிடலாம்.

இப் பாடசாலையிலிருந்து பொறியியல் பீடத்திற்கும், மருத்துவ பீடத்திற்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளார்கள். அதுபோல க.பொ.த (உ/த), க.பொ.த (சா/த) தரம், 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையிலும் திருப்திகரமான முடிவுகளை இப்பாடசாலை மாணவர்கள் பெற்று இக் கல்லூரிக்குச் சாதனை படைத்துள்ளார்கள்.

**கௌரவிப்பு :**

இவைகளின் பிரதிபலிப்பாகவேதான் வருடா வருடம் இடம் பெறுகின்ற **'ஆசிரியர் தின விழா'** விலே அதிபர், பிரதி அதிபர் முதல் சகல ஆசிரியர்களும் மாணவர் செல்வங்களினால் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு கொளரவிக்கப் படுகின்றார்கள். பெற்றோர்கள், நலன் விரும்பிகளினால் இவர்களுக்கு நினைவுச் சின்னம், மற்றும் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்படுகின்ற நிகழ்வுகளும் மறக்க முடியாததாகும்.

**"ஆரம்ப வரலாறு"**

இவ்வாறு சாதனை படைத்து வரும் இக் கல்லூரியின் ஆரம்ப கால வரலாற்றினையும் எமது வாசகர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசிய மானதாகும்.

இப் பாடசாலை ஆரம்ப காலத்திலே மெதடிஸ்த மிஷன் பாடசாலை என்னும் பெயருடனே 1874ம் ஆண்டு ஆரம்பமான ஒரு சிறிய பாடசாலையாகும். செங்கலடி பிரதேச வளர்ச்சியினால் மெதடிஸ்த மிஷன் என்ற பெயர் மாற்றமடைந்து, செங்கலடி மகா வித்தியாலயம் எனவும் பெயர் பெற்று தற்போது செங்கலடி மத்திய கல்லூரியாகத் தரம் உயர்ந்த நிலையில் இப்பாடசாலை விளங்குகிறது.

இருந்தாலும் கடந்த 1990ம் ஆண்டு வன்செயலினால் பல வழியிலும் பாதிப்படைந்த இப்பாடசாலை. 1991ம் ஆண்டு முதல் இப் பாடசாலையினால் தான் ஏறாவூர்

பற்று தமிழ் பிரிவிற்கான மீள் குடியமர்வு, ஏறாவூர் - 04, ஏறாவூர் - 05, ஐயங்கேணி, சவுக்கடி, தளவாய், ராமேஸ்புரம், கொம்மாதுறை போன்ற கிராம மக்கள் முதன் முதலாக இப்பாடசாலையிலேயே மொத்தமாக குடியமர்த்தப்பட்டு பின்னர் படிப்படி யாகத் தமது கிராமங்களுக்கு மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

அவ்வேளையிலே இப் பாடசாலையில் தான் ஏறாவூர்பற்று உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், செங்கலடி வைத்திய சாலையின் நடமாடும் சேவைப் பிரிவு, செங்கலடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், செங்கலடி தபாலகம் உட்பட அரச அலுவலகங்களும் செயல்பட் டன.

இக்காலத்திலே தற்போது ஏறாவூர்பற்று மத்தியஸ்த சபையின் தலைவராக இருக்கின்ற ஏறாவூர் - 05 ஐச் சேர்ந்த ஏறாவூர்பற்று - 2 கோட்டக்கல்வி அதிகாரியாகவிருந்து ஓய்வு பெற்ற க. விஜயரெத்தினம் அதிபராக இருந்தார்.

அவரையடுத்து இக்கல் லூரியை மீளக் கட்டி எழுப்பி புத்துயிர் கொடுப்பதற் காக 17.3.1989 தொடக்கம் பிரதி அதிபராகக் கடமையாற்றிய வ.கந்தசாமி 7.10.1992 ம் ஆண்டு அதிபராக இப்பாடசாலைக்கு நியமிக் கப்பட்டார். இவருடைய கால சேவை யினைத் தொடர்ந்து இக் கல்லூரியின் பிரதி அதிபரான க. சிறிதரன் செங்கலடி மத்திய கல்லூரியின் அதிபராக சேவையாற்றி வருகிறார்.

## பன்றிக் காய்ச்சல் தடுப்பு மருந்துக்கு அமெரிக்கா நிதியுதவி

அமெரிக்க அரசு பன்றிக் காய்ச்சல் தடுப்பு மருந்து உற்பத்தித் திட்டம் எதுக்கெனினும் நிதி வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. அத்துடன் பாடசாலைகள் மற்றும் சுகாதார மனிதாபிமான தொண்டு நிறுவனங்களுக்கும் தடுப்பு மருந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள நிதியுதவி அளிக்கவும் முன்வந்துள்ளது. வரும் ஒக்டோபரில் தடுப்பு மருந்து திட்டம் இவ் நிதியுதவியில் முக்கிய பங்கு வகிக்கவுள்ளது. ஏறத்தாழ 100 மில்லியன் சொட்டு மருந்துகள் தேவையாகவுள்ள நிலையில் அவற்றைத் தயாரிக்கவும் அவற்றை விநியோகிக்கவும் தாம் உதவவுள்ளதாக அமெரிக்க சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது.

அண்மையில் திடீரென பரவ ஆரம்பித்து உலகையே அச்சுறுத்தி வரும் பன்றிக் காய்ச்சல் இதுவரை 400 பேரை கொன்றும் 500,000 பேர்வரை பாதிப்புக்குள்ளாகி உள்ள நிலையில் அதன் தொற்றுக் காரணியான வைரசுக்கு தடுப்பு மருந்து ஒன்றை உருவாக்கிவிட பல நாடுகள் முனைப்புக்காட்டி வருகின்றன.

# நீரிழிவு நோய்

Dr.J.C. P.ராஜேந்திரன் V.P
Dr.K. தியாகேசன் S.H.O

**காலிலுள்ள நரம்புகளால் ஏற்படும் பாதிப்பு**

இது நியூரோபதி (Neuropathy) என அழைக்கப்படும். இதனால் காலில் சூடு, குளிர், தொடுகை, நோவு போன்ற உணர்ச்சிகளை உணர முடியாத நிலை ஏற்படும். இவற்றின் காரணமாக இலகுவாக காயங்கள் ஏற்படும் நிலை தோன்றும்.

- இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிப்பதனாலும், கால்களுக்கான நோயெதிர்ப்பு சக்திகள் குறைவடைவதனாலும் கால்களில் காயங்கள் இலகுவில் ஏற்பட்டு, இக்காயங்கள் இலகுவில் குணமடையும் தன்மையையும் இழக்கின்றன.

**நீரிழிவு நோயாளிகளின் கால்களில் எவ்வகையான மாற்றங்கள் ஏற்படலாம்?**

- நகங்களிலும் தோலிலும் நிறமாற்றங்கள் ஏற்படும்.
- காலில் உரோமம் வளர்வது குறைவடையும். தோல் பளபளப்பாக இருக்கும்.
- நகங்கள் மஞ்சள் நிறமாகவும் இலகுவில் உடையக் கூடியதாகவும் மாறும்.
- கால் விறைப்பாக இருக்கும். உணரும் தன்மை குறைவடையும்.
- இலகுவில் காயங்கள் மற்றும் கொப்புளங்கள் ஏற்படும்.
- விரல்களின் நுனிப்பகுதியோ அல்லது விரலோ கறுப்பு நிறமாக மாறும். (Gangrene)
- பாதங்களில் தோல் தடிப்படைந்து கோர்ன் (Corn), கலோசிரி Callosity) என்பன உருவாகும். இதனால் ஏற்படும் பாதகங்களும் அதிகம்.
- நடக்கும் போது கால்களிலோ அல்லது சில வேளைகளில் தொடைப்பகுதியிலோ வலி ஏற்படும். இது காலிற்கான இரத்தவோட்டம் குறைவடைவதின் ஆரம்ப அறிகுறியாகும். இரத்தவோட்டம் மேலும் குறைவடையும் போது இரவு நேரங்களிலோ அல்லது ஓய்வு நேரங்களிலோ இவ்வலி ஏற்படத் தொடங்கும். (Rest pain) கால்களைத்

தொங்கவிடும் போது இவ்வலி குறைவடையும். ( இவ்வாறான நிலை ஏற்படின் வைத்தியரின் ஆலோசனையைப் பெறுவது அவசியமாகும்)

**நீரிழிவு வியாதியை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்.**

மூன்று முக்கிய முறைகளினால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தலாம்.

(அ) Life style modification. வாழ்க்கையில் சில சுகாதாரமற்ற பழக்க வழக்கங்களை மாற்றுதல்.

(ஆ) மாத்திரைகளை பாவிப்பதன் மூலம் (Tablets)

(இ) இன்சுலின் (Insulin) ஊசி மருந்து பாவிப்பதன் மூலம்.

இம்மூன்று முறைகளில் முதலாவது முறை (Life style modification) மிகவும் முக்கியமானது. ஒரு நீரிழிவு நோயாளி குளிசைகளையோ, இன்சுலினையோ பாவிக்கலாம். ஆனால் முதலாவது முறையை சரியாக கடைப்பிடிக்காவிட்டால் இரத்தத்தில் சீனியைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் கடினம். அதனால் ஏற்படும் பாதகங்களும் அதிகம்.

**(அ) 'Life style modification' என்றால் என்ன?**

**(i) முறையான உணவு பழக்கங்கள்**

நீரிழிவு நோயாளிகள் அனைவரும் உணவுக்கட்டுப்பாட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நீரிழிவு நோயாளி தனக்குரிய உணவை சரியாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

## நீரிழிவு நோயாளியின் உணவுத் தெரிவு

நீரிழிவு நோயாளி ஒருவர் பின்வருவனவற்றை கருத்தில் கொண்டு பொருத்தமான உணவை தெரிவு செய்து உண்டு வந்தால் மருந்துகள் இல்லாமலோ அல்லது ஆகக் குறைந்த மருந்துகளாலோ தனது குருதியில் உள்ள சீனியின் அளவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். இதனால் வீண் பண விரயம், மருந்துகளின் பக்கவிளைவுகள் என்பவற்றை தவிர்க்க முடியும்.

சில உணவுகளை தவிர்த்தாலும் போதியளவு உணவு உண்பதற்கு உள்ளது என்பதை கருத்திற் கொள்க.

- சீனி செறிந்த பண்டங்கள் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.
(உ-ம்) சீனி, ரின்பால், ஐஸ்கிறீம், சர்க்கரை, பனங்கட்டி, தேன், ஜாம், ஜெலி, கேக், புடிங், ரொபி, சொக்கிலேட், இனிப்பு, பலகாரம், லட்டு, தேன்குழல், மஸ்கட் என்பன.

- இனிப்பு செறிவான பழங்கள் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.
(உ-ம்) பேரீந்து, பழவற்றல்கள் (பிளம்ஸ்), கப்பல் வாழைப்பழம், தகரத்தில் அடைத்த பழங்கள் என்பன.

அளவுடன் உண்ணக்கூடிய பழங்களை பிரதான ஆகாரங்களின் பின்னரோ அல்லது சிற்றுண்டி வேளைகளிலோ உண்ணலாம்.
(உ-ம்) கதலி வாழைப்பழம் (சிறியது)
ஒரு துண்டு பப்பாளி/அன்னாசி/கொய்யா/மாம்பழம்/அப்பிள் (சிறியது)
சீனி கலக்காத 3/4 கோப்பை இயற்கை பழச்சாறு.
பழச்சாற்றினை விட பழமாக உண்ணுதல் நல்லது.
தோடம்பழச்சாறு (ஊர்தோடை), எலுமிச்சம் பழச்சாறு என்பனவற்றை சீனி சேர்க்காமல் அருந்தலாம்.

- மாச்சத்து நிறைந்த சோற்றைக் குறைத்து அதற்குப் பதிலாக சிவப்பு அரிசிச் சோறு (1-3 தேனீர்க் கோப்பை), குரக்கன்மா, சோயாமாவினால் செய்த பதார்த்தங்களை சேர்க்கலாம்.
தவிட்டரிசிமா அல்லது குரக்கன்மாவினால் தயாரிக்கப்பட்ட பதார்த்தங்கள் கிடைக்காத பட்சத்தில் பாண் அல்லது கோதுமை மாவினால் செய்த
பதார்த்தங்களை உண்ணலாம்.
பருப்பு, கடலை, கௌபி, பயறு, சோயா அவரை போன்றவற்றையும் பிரதான உணவாக உட்கொள்ளலாம்.

- கிழங்கு வகைகளான மரவள்ளி, உருளைக்கிழங்கு, வற்றாளை, பீற்றூட் போன்றவற்றை தவிர்க்கவும்.
கரட், பீற்றூட் என்பவற்றை பச்சையாக சாப்பிடுவதை விட சமைத்துச் சாப்பிடுதல் சிறந்தது.
முள்ளங்கி, நோக்கோள் தாராளமாக சேர்த்துக் கொள்ளலாம்.

- மரக்கறி வகைகளை எந்தவித கட்டுப்பாடுமின்றி உண்ணலாம்.
(உ-ம்) போஞ்சி, புடலங்காய், பாகற்காய், முருங்கைக்காய்,

வெண்டிக்காய், கத்தரிக்காய், லீக்ஸ், பலாக்காய், கோவா, கெக்கரிக்காய், பூசணிக் காய் (சீமயப் பூசணி தவிர்த்து) தக்காளி எல்லா கீரை வகைகளும்.

**குறிப்பு:**

மரக்கறி உணவு உட்கொள்வதால் நீரிழிவு நோயாளிகளில் சிறுநீரக பாதிப்பு ஏற்படுவது தடுக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

❋ எந்தவிதமான எண்ணெயையும் (சூரியகாந்தி, சோயா, மரக்கறி எண்ணெய் அடங்கலாக) குறைந்தளவிலேயே உபயோகிக்க வேண்டும். பால், தயிர், நெய், என்பவற்றை தவிர்க்க வேண்டும்.

❋ ஆடை நீக்கிய பால் (Non fat) வகைகளை உபயோகிக்கலாம். எண்ணெய்ப் பதார்த்தங்கள் உடல் நிறையை அதிகரிப்பதோடு, குருதியில் கொலஸ்ரோலின் அளவையும் அதிகரித்து இருதய நோய் ஏற்படும் வீதத்தை பன்மடங்காக்குகிறது.

❋ நெஸ்ரமோல்ட், வீவா, ஹோர்லிக்ஸ், சஸ்ரஜன், போன்ற பால் வகைகளை தவிர்க்கவும்.
இவற்றில் சீனி அதிகம் உள்ளது.

❋ மாமிச உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.
சிறிய மீன்வகைகளை தாராளமாக உண்ணலாம். முட்டை மஞ்சள் கருவை தவிர்த்து வெள்ளைக் கருவை தாராளமாக உட்கொள்ளலாம். கொழுப்புச்சத்து கூடிய பன்றி, மாடு, ஆடு, இறைச்சிகளை தவிர்க்கவும். தோல்பகுதி (கொழுப்பு) அகற்றிய கோழி இறைச்சியை அளவாக உட்கொள்ளலாம். பொரித்த இறைச்சி உட்கொள்வதை குறைக்கவும்.

❋ உப்பு செறிவான உணவு வகைகளை தவிர்க்கவும்.
(உ-ம்) மார்மைற், உப்புக்கருவாடு, உப்பு பிஸ்கட், உப்பு சேர்க்கப்பட்ட கடலை வகைகள், பட்டர், மாஜரின்.

மேற்குறிப்பிட்ட உணவுகள் உடல் பருமனை ஏற்படுத்துவதுடன் உயர் குருதியமுக்கத்தை ஏற்படுத்தி இருதய, சிறுநீரக வியாதிகள் வரும் சந்தர்ப்பத்தை பன்மடங்காக்குகிறது.

❋ **பானங்கள்**

தெளிந்த சூப், எலுமிச்சை சாறு, சீனிகலக்காத இயற்கை பழச்சாறு

(இனிப்பற்றது) இளநீர், கோப்பி, தேநீர் என்பவற்றை பிரதான உணவுக்கு இடையில் பருகலாம்.

இனிப்பு சோடா வகைகள், ஏனைய சோடா வகைகள், செறிந்த பழச்சாறு, சர்பத் என்பவற்றை தவிர்த்தல் வேண்டும்.

**குறிப்பு :**
சிறுநீரக கோளாறு உள்ள நீரிழிவு நோயாளர்கள் கோப்பி, இழநீர், எலுமிச்சைசாறு, பழங்கள் போன்றவற்றையும் தவிர்க்க வேண்டும். இவற்றில் பொட்டாசியம் அதிக அளவாக இருப்பதால் உடலுக்குச் சிறந்ததல்ல.

மேற்குறிப்பிட்ட உணவுக் கட்டுப்பாட்டை அடிப்படையாக வைத்து நீரிழிவு நோயாளர் ஒருவருக்கு அறிவுறுத்தப்பட்ட ஓர் நாளிற்கான உணவு அட்டவணை மாதிரி கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| விடியற்காலை | : | கொழுப்பற்ற பால் (1 மேசைக்கரண்டி பால், சீனி அற்றது) |
| காலைச்சாப்பாடு | : | தவிட்டரிசி இடியப்பம் - (100g அளவு)<br>வாழைப்பழம் 2 (100g அளவு) (புளிக்கதலி) |
| மதியச்சாப்பாடு | : | தவிட்டரிசிச் சோறு - 1 தேனீர் கப்(100g அளவு)<br>கொழுப்பற்ற மீன் - 90g அளவான துண்டு<br>(2ம் தேங்காய்ப்பாலை பாவிக்கவும்)<br>கலப்பு மரக்கறி - 100g (5மேசைக்கரண்டி அளவு)<br>(2ம் தேங்காய்ப்பாலை பாவிக்கவும்) |
| பிற்பகல் | : | கொழுப்பற்ற பால், 1-2 கிறீம் கிரேக்கர் பிஸ்கட் |
| இரவுச்சாப்பாடு | : | தவிட்டரிசிச் சோறு 100g<br>மீன் கறி 90g<br>கலப்பு மரக்கறி 100g |

Total Energy : 1, 641.5 k.cal

குறிப்பு : சாப்பாட்டின் பின்னர் பழங்கள் ஏதாவது உபயோகிப்பதாயின் அப்பிள், புளிக்கதலி வாழைப்பழம், பப்பாசிப்பழம் (30g துண்டு), தோடை, புதிதான பழங்களின் சாறு (சீனி அற்றது) ஆகியன உகந்தது.

(தொடரும்.......)

நன்றி ~ நீரிழிவு நோய்க் கையேடு

# தேவையா இடைவெளிகள் ?

ஏறாவூர் தாஹிர

இனிமேலும் தேவைதானா
இடைவெளிகள் எமக்குள்?
இனிமேலும் புரிவதா நாம்
இழிசெயல்கள், சதி, பழிகள்?
எழிலமுதாம் மொழி தமிழில்
எல்லாமே செய்வோர் நாம்!
எண்ணம், செயல் வடிவம்
மொழி தமிழாய் உள்ளோர் நாம்!
எண்ணங்கள் எழிலானால்,
எல்லாமே எழிலாகும்!
படிப்படியாய் வெற்றிகளும்
பாரதமாய் விரிவடையும்!
எண்ணங்கள் இழிவென்றால்,
எல்லாமே இழிவடையும்!
இழிவடைந்தவை முடிவில்
அழிவில் கதை முடியும்!
வரலாறுகள் கூறும்
வாழ்வியலின் பேருண்மை!

'தமிழன்', 'சோனி' என்ற
தரம் கெட்ட சொற்பதங்கள்...
நீ வேறு, நான் வேறாய்
நிறைகொள்ளும் பிரிவினைகள்...
என் முதுகில் நீயேறி,
உன் நெஞ்சில் நான் மிதித்து
உயர்வடையும் எத்தனங்கள்...
அனைத்தும் அழிந்தொழிந்து,
அனைத்தையும் அழித்தொழித்து...
அன்னை தமிழ் பெயரால்
அண்ணன், தம்பிகளாய்...
அக்கா, தங்கைகளாய்...
எண்ணம், செயல் தொடரின்
தொட்டனைத்தும் பொன்னாகும்!

இடைவெளிகள் பெரிதாக்கி,
இனமுறுகல் உருவாக்கி
இதயம் குளிருமெனில்,
இருப்பவையும் பறிபோகும்!
கோயில்கள் கூடி நின்று
கும்பிட்டும் பயன்கிடையா!
ஆலயங்களில் கசிந்து
வழிபட்டும் வழி பிறக்கா!
மசூதிகளில் மனமுருகி
மன்றாடியும் அமையா!
இறைவன் சிருஷ்டிப்பில்
இன, குலப் பேதமில்லை!
உள்ளத்தொளி கொண்டால்...
உண்மை வழி சென்றால்...
கள்ளத்தனமற்ற
காரியங்கள் மேற்கொண்டால்...
மெல்லத்துயர் மறையும்!
மேன்மை மிகு வாழ்வமையும்!
எனவே தான்,
இனிமேலும் தேவையா சொல்;
இடைவெளிகள் எமக்குள்?
இனியும் புரிவதா நாம்
இழி செயல்கள், பழி, சதிகள்?

# TELE COMMUNICATION AND MASS MEDIA DIALOG SERVICE

Dialog Package PostPaid

Per Second Blaster

Get your home BROADBAND CONNECTION now!

Dialog i Broadband

VERY very FAST INTERNET

STUDENT HOME NET PACKAGE
DOCTOR HOME NET PACKAGE

Dialog CDMA 7 SEVEN MEGA BLASTER



*Tele Communication and*
*Mass media Dialog Service*
*310, Trinco Road, Batticaloa.*
*Tel: 065-7210199*
*Fax : 065-2225404*

AD/0019

# பல்வேறு மனிதாபிமானப் பணிகளை முன்னெடுத்து வரும் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்

க.கிருபாகரன்

ஸ்ரீ லங்கா தேசிய மன்றம் போர் அனர்த்தம் மற்றும் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களுக்குள்ளாகி, வறுமை நிலையில் வாழும் மக்களை இனங்கண்டு, அவர்களைப் பொருத்த மான விழிப்புணர்வூட்டல், ஒன்றிணைத் தல், உற்சாகப்படுத்தல் போன்ற செயற்திட்டங்கள் மூலமாக தன்னாலும் முடியும் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களை நெறிப்படுத்தியுள் ளது.

இதன் அடிப்படையில் இம்மன் றம் இப்பொழுது, இவ் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை செயற்படத்தக்க வகையிலான 03 ஆண்டுக்கடன் அபிவிருத்தித் திட்டமொன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

இத்திட்டம் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நடை முறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்படி மாவட்டங்களிலுள்ள 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஒவ்வொன் றும் 50,000/= இற்கு மேற்படாத சிறு கடனும், ஒவ்வொன்றும் 300,000/= இற்கு மேற்படாத பெரிய கடனும் வழங்கப்படுகிறது.

இதே வேளை சுனாமி, புயல் போன்ற இயற்கை அனர்த்தம் மற்றும், யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென தற்காலிக குடிசைகளை யும், நூற்றுக்கணக்கான நிரந்தர வீடுகளையும், குளாய்க்கிணறு மற்றும், மலசலகூடங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளதை நாம் கண்ணூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

இது இவ்வாறிருக்க மன்றம் ஆன்மீக ரீதியாகவும் மக்கள் மனதில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்ற நிலையில் 1997இல் நிஷப்தம் ஸ்ரீ மகா விஷ்ணு தேவஸ்தானம் என்ற ஆலயம் ஒன்றை அமைத்துள்ளதையும் காண லாம்.

இவ்வாறாக சமூக, கலை, கலாசார, கல்வி, பொருளாதார, ஆன்மீக ரீதியாக மக்கள் மனதில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும் என்ற உன்னத நோக்கோடு சரீரம் ஸ்ரீலங்கா மன்றத்தை தலைவர் ஆ.லோகேஸ்வரன் நெறிப்படுத்தி வருவதை யாரும் மறுதலிக்க முடியாது.

# தென்றல் சஞ்சிகையின் ஓராண்டு நிறைவு விழா






மட்டக்களப்பு கரித்தாஸ் - எகெட் நிறுவனப் பணிப்பாளர் வணபிதா சிறிதரன் சில்வெஸ்டர் மற்றும் கதைமாமணி மாஸ்டர் சிவலிங்கம் ஆகியோர் குத்து விளக்கேற்றுகின்றனர்.



சிவானந்தா தேசிய பாடசாலை மாணவன் மகாலிங்கசிவம், புருஷோத்தமன் தேவாரம் இசைக்கிறார்.



"தென்றல்" ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த கே.வாமதேவன் வரவேற்புரையாற்றுகிறார்.




"தென்றல்" சஞ்சிகை ஆசிரியர் க.கிருபாகரன் தலைமையுரையாற்றுகின்றார்.



மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனப் பணிப்பாளர் வணபிதா சிறிதரன் சில்வெஸ்டர் சஞ்சிகையின் முதல் பிரதியினை தென்றல் ஆசிரிய பீட ஆலோசகர் இரா.நாகலிங்கம் (அன்புமணிக்கு) கையளிக்கின்றார்.




மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.லக்ஷ்மி சுந்தரம் உரையாற்றுகின்றார்.



"தென்றல்" ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த திருமதி. சிறிதேவி. சங்கர் நன்றியுரை யாற்றுகின்றார்.



ஆசிரியர் க.பிரபாகரன் நூல்
நயவுரைக்கின் றார்.




நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளையும், போட்டியில் வெற்றியீட்டிய
மாணவர்களையும் படங்களில் காணலாம்.



சிரேஷ்ட ஊடகவியலாளர்
எஸ்.ஹரிச்சந்திரன் நிகழ்ச்சிகளை
தொகுத்து வழங்குகிறார்.

# புதிய வரவுகள்




**நூல் :** மனதைக் கவர்ந்த கண்ணன்

**ஆசிரியர் :** ஆர்.ஏ.கே.விஜயரட்ணம்

**தொடர்புகளுக்கு :** 07, திசவீரசிங்கம் சதுக்கம்,
எல்லைவீதி, மட்டக்களப்பு.

**தொலைபேசி :** 077 - 9558238
060 - 2641005

(மனதைக் கவர்ந்த கண்ணன் பல்வேறு வரலாற்று உண்மைகளை எம்முன்னே சொல்ல வந்துள்ளது.

இவ் இதழ் மகாலட்சுமி தோன்றி, மஹாவிஸ்ணுவிற்கு மாலை இடல், பிரம்மனின் ஆணவம் சிவனால் அடக்கப்பட்டது, சைவம், வைணவம் இரண்டிற்கும் வேறு பாடில்லை.... போன்ற தலைப்புக்களில் அலசி ஆராய முற்படுவதைக் காணலாம்.

88 பக்கங்களில் அழகிய கண்ணனின் பள்ளி கொள்ளும் காட்சியை முகப்பில் தாங்கி வெளி வந்திருக்கிறது. "மனதைக் கவர்ந்த கண்ணன்" என்னும் நூல்




**நூல் :** அ.ந.க. ஒரு சகாப்தம்

**ஆசிரியர் :** அந்தனி ஜீவா

**தொடர்புகளுக்கு :** சமாதான நீதவான்
இல. 57, மகிந்தா பலஸ், கொழும்பு - 06

**விலை :** 100/=

இந் நூல் அ.ந.க பற்றி இலக்கிய வானில் சுடர் நட்சத்திரம், துள்ளி விளையாடும் பள்ளிப் பருவம், எழுத்துத் துறையின் ஆரம்ப காலம், தகவல் பகுதி, பத்திரிகைத்துறை, முதல் சந்திப்பு...., அ.ந.கவின் கவிதைகள் போன்ற பல்வேறு தலைப்புக்களில் விரிந்து செல்வதைக் காணலாம்.

48 பக்கங்களில் அ.ந.கவின் அட்டைப்படத்துடன் பிரசவித்துள்ளது இந்நூல்.

# தென்றலே! வாழிய பல்லாண்டு!!

- கல்லடி சரசிராஜா -

வா ச க ர் நெ ஞ் ச ம்

மண் வாசனை மணக்கக் கண்டேன் மட்டு நகர மக்கள்
கண் ணெனக் கருதும் தமிழ் மண்ணை காத்திடக் கண்டேன்
பண் ணிசையொடு பாடல்கள் பல இசைக்கக் கண்டேன்
விண்ண திர கவிதைகள் பல பண்ணொடு பாடவும் கண்டேன்

தாய்மொழி தமிழ் தவழ்ந்திட நாடு வேண்டும் - தென்றல்
பாய்ந்திட அலைமோதும் தமிழ் ஆக்கம் பல வேண்டும்
ஆய்வுகள் பல வேண்டும், தமிழ் மண்ணின்பெருமையனைத்தும்
தேய்ந்திடாமல் எம்மொழி வடமொழிக்கு நிகராக வேண்டும்.

மணம் கமழும் தென்றல் போன்றதொரு சஞ்சிகை ஏடு
கணம் நின்றிடாத படைப்பு நெடு நாள் நிலைக்க திறமை
தினம் உண்டு மட்டுநகர மண்ணிற்கு வந்ததொரு தென்றல்
மணம் பரவிட நான்வழங்கும் வாழ்த்து, மலருக்கு வந்தனம்.

திரை கடலாம் ஆழ்ந்த பல ஆக்கம் தென்றல் ஏட்டில் இனிது;
நிரை நிரையான தமிழ் வடிவம் அம்மலரில் கண்டேன்
கரை தட்டிலாத கட்டுரை, கதைகள், கவிதைகள் சுவைத்தேன்
விரைவாக எழுந்த தென்றல் தமிழ் ஏட்டிற்கு என் வந்தனம்!

# நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்ற பழம்பெரும் கிராமம் மஞ்சந்தொடுவாய்

- மாஸ்டர் சிவலிங்கம் -


மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே சுமார் இரண்டரை மைல் தொலைவில் அமைந்துள்ளது மஞ்சந்தொடுவாய்க் கிராமம். அதன் கிழக்கெல்லையாக வங்காள விரிகுடாக் கடலும், மேற்கு எல்லையாக மட்டக்களப்பு வாவியும், வடக்கு எல்லையாக நாவற்குடாக் கிராமமும், தெற்கு எல்லையாக காத்தான்குடிக் கிராமமும் அமைந்துள்ளன. இந்தக் கிராமத்துக்கு "மஞ்சந்தொடுவாய்" என்ற பெயர் ஏற்பட்டதற்கு கர்ணபரம்பரைக் கதை ஒன்று உள்ளது.

இந்தக் கிராமத்தின் மத்தியிலே அக்காலத்தில் பெரிய குளம் ஒன்று அமைந்திருந்தது. மழை காலத்திலே அந்தக் குளம் நிரம்பி வழிவதால் கிராம மக்கள் பெரும் கஸ்டங்களுக்குள்ளானார்கள்.


அதனை அவதானித்த அக் கிராமத்தலைவனான மஞ்சன் என்பவன் மக்களின் ஒத்துழைப்போடு பாரிய கால்வாய் வெட்டி மட்டக்களப்பு வாவியுடன் தொடுத்து விட்டான். அதன் பின்னர் மழை காலத்தில் வெள்ளம் வாவியைச் சென்றடைந்ததால், மக்கள் வெள்ள அபாயத்திலிருந்து காப்பாற்றப் பட்டனர்.

மஞ்சன் தொடுத்த கால்வாய் என்பது மருவி - மாறி மஞ்சந்தொடுவாய் என அக்கிராமம் விளங்கியது என்பது அந்தக் கர்ணப்பரம்பரைக் கதையாகும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு மஞ்சந்தொடுவாய்க் கிராமத்தில் மக்கள் அதிகளவில் செறிந்து வாழ்ந்தனர். அண்மைக்காலத்தில் ஏற்பட்ட இனக் கலவரங்களின் காரணமாக, இக் கிராம மக்கள் பல்வேறு இடங்களுக்குக் குடி பெயர்ந்து விட்டதால் தற்போது இங்கு குறைந்தளவு குடும்பங்களே வாழ்ந்து



ஆலடி ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்



ஆலடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

வருகின்றன. கிராமத்தின் தெற்கு எல்லையை அண்டிய பகுதியில் இஸ்லாமிய மக்கள் ஓரளவு செறிந்து வாழ்கின்றனர்.

இனப்பிரச்சினையின் காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்ட மஞ்சந்தொடுவாய்க் கிராமம் அரச சார்பற்ற நிறுவனமான 'நொறாட்' அமைப்பினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மஞ்சந்தொடுவாயில் பழம் பெருமைமிக்க ஆலடிச் சித்தி விநாயகரும், கற்புக்கரசி கண்ணகி தேவியும் கோயில் கொண்டு மக்களுக்கு அருள் புரிந்து வருகின்றனர். இனப்பிரச்சினைகளின் போது இக்கிராமத்தில் உயிரிழப்பு அதிகம் ஏற்படவில்லை. இதற்கு விநாயகரும், கண்ணகை அம்மனுமே காரணம் என்பது கிராம மக்களின் ஏகோபித்த நம்பிக்கையாகும்.

ஆலடிச் சித்திவிநாயகர் ஆலயத்தில் மாசி மாதத்தில் மாசி மகத் திருவிழா கோலாகலமாக நடைபெறும். கண்ணகையம்மன் ஆலயத்தில் வைகாசி மாதம் சடங்குகளும் குளிர்த்தி வைபவமும் பக்தி பரவசத்துடன் கோலகலமாக நடைபெறும். பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் திரண்டு வந்து பிரார்த்திப்பர். இக்கிராமத்தில் வீரபத்திரர் ஆலயம் பள்ளிவாசல், மெதடிஸ்த தேவாலயம் ஆகியனவும் அமைந்துள்ளன.

மஞ்சந்தொடுவாயில் உள்ள புகழ்மிக்க சித்திவிநாயகர் ஆலய புனருத்தாரணப் பணிகளை ஆலய பரிபாலன சபையினர் தீவிரமாக மேற்கொண்டு கோலாகலமாக கும்பாபிஷேகத்தை நடத்தினர். தற்போது ஆலயம் புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

மஞ்சந்தொடுவாயில் அமைந்துள்ள தொழில்நுட்பக்கல்லூரி உயர் கல்வி பெற்ற மாணவர்களுக்கு நவீன முறையிலே தொழிற்கல்வி ஊட்டி வருகிறது. மேற்படி கல்லூரியில் மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் தொழிற்கல்வி பயின்று வருகின்றனர்.

இக்கிராமத்தில் உள்ள பாரதி வித்தியாலயம், சாரதா வித்தியாலயம், முஸ்லிம் வித்தியாலயம் ஆகியன சிறார்களுக்கு கல்விப் பணி புரிந்து வருகின்றன.

முன்னேற்றத்துக்கு ஆலய பரிபாலன சபை, சமுர்த்தி இயக்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், மகாத்மா காந்தி சிக்கன வசதிச்சங்கம் ஆகியன நற்பணி ஆற்றி வருகின்றன.

முன்னர் வன்செயல்களால் பெருமளவு பாதிக்கப்பட்டு சோபை இழந்திருந்த மஞ்சந்தொடுவாய்க் கிராமம் படிப்படியாக பலவகைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருவது பாராட்டுக்கு உரியதாகும்.

# வினா விடை அரங்கு - 05



**நிபந்தனைகள்:**

- இப்போட்டியில் பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.
- ஒருவர் எத்தனை விடைக்குறிப்புகளையும் அனுப்பி வைக்கமுடியும்.
- அனுப்பி வைக்கப்படும் விடைக்குறிப்புகளுடன் நுழைவுச் சீட்டுகளும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
- நுழைவுச் சீட்டுக்கள் இணைத்து அனுப்பப்படாத விடைக்குறிப்புக்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
- அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படும் மூவருக்கு முறையே 250/=, 200/=, 150/= பணப்பரிசில்கள் வழங்கப்படும். அத்தோடு ஆறுதல் பரிசாக மூவருக்கு முறையே 100/= வீதம் வழங்கப்படும் விடைக்குறிப்புக்களை அனுப்ப வேண்டிய இறுதித் தினம் புரட்டாதி - 05 - 2009.

**வினாக்கள் - இல - 05**

1. இவ்வாண்டு I.C.C 20-20 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை நடத்திய நாடு எது?
2. இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் யார்?
3. தமிழிலுள்ள உயிர் மெய் எழுத்துக்கள் எத்தனை?
4. மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள் இரண்டின் பெயர்களைத் தருக.
5. மாநகராம் மட்டு மாநகராம் மீன் மகள் பாடும்.... எனும் பாடலைப் பாடிய எம்மண்ணின் மைந்தர் யார்?

**வினாக்கள் - இல - 5**
**நுழைவுக் கூப்பன்**

முழுப்பெயர் : ........................................

தரம் : ........................................

பாடசாலை : ........................................

## வினா விடை அரங்கு - 04ற்கான விடைகள்

1. மயோன் முஸ்தபா
2. குமார் சங்கக்கார
3. 20 மைல்கள்
4. பரக் ஒபாமா
5. மார்க்கோணி

## இதற்கான சரியான விடையினை அனுப்பியவர்களிலிருந்து பரில்களுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

1. தயாபரன் டிலக்சினி
   தரம் - 05A
   மட்/ கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்.

2. கந்தசாமி கிசோபனா
   தரம் - 05
   மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்.

3. துரைராஜசிங்கம் சோபிகா
   தரம் - 05
   மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்.

## ஆறுதல் பரிசு பெறுவோர்

1. வேதநாயகம் சஜிதா
   தரம் - 05
   மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்

2. சுரேந்திரன் யுகந்தன்
   தரம் - 05
   மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்

# தருமம் தலைகாக்கும்



துர்நாற்றம் பிடித்த அந்த இருட்ட றைக்குள் குற்றவாளியாக அடைபட்டுக்கிடந் தான் ரிஷிகேசன்

நுளம்புக்கடி ஒரு பக்கம். வியர்வை ஒரு பக்கம். அவனை வதைத் தெடுத்தது.

இந்த நரகத்தில் இருந்து எப்படி விடுபடப்போகிறேனோ என்று வழி தெரியாமல் அவன் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

கடவுளே நான் என்ன பாவம் செய்தேன். ஒரு தப்பையுமே செய்யாத என்னை... பெரியதொரு 'பயங்கரவாதி' என்று கைது செய்து கொண்டு வந்து உயிரை வாங்குகிறார்களே. வேதனை தாங்க முடியாமல் தனக்குள்ளேயே சலித்துக் கொண்டான்.

என்றைக்காவது ஓர் நாள் தான் இப்படி ஒரு சிக்கலில் மாட்டிக் கொள்வானென்று அவன் கனவில் கூட நினைத்தானில்லை.

தானுண்டு தன் படிப்புண்டு என்றிருந்த ஒரு அப்பாவியை 'விதி' இப்படிக் கொண்டு வந்து வேடிக்கை பார்க்கிறதே என்ற உண்மையை அவனால் இன்னுந் தான் ஜீரணிக்க முடியவில்லை.

அப்பாவும் இல்லாத தன் குடும்பத்தின் கதி இனி என்னவாகப் போகுதோ? அம்மாவும் தம்பி, தங்கச்சியும் என்னபாடு படுகிறார்களோ, இப்படித் தன் குடும்பத்தையே எண்ணி எண்ணி அவன் மனசு கலங்கத் தொடங்கியது. பூட்டப்பட்டி ருந்த அந்தச் சின்ன அறைக்குள் கையகலத் தில் ஒரு சின்ன ஓட்டை, அதன் வழியாகத் தான் காற்று உள்ளே வர வேண்டும். ரிஷி அந்த ஓட்டையினூடாக வெளியே பார்த் தான். வானம் இருண்டு போய்க் கிடந்தது. இந்த வானத்தைப் போலத்தான் என் மனசும் இருண்டு போய்க் கிடக்கிறது. தனக்குள் ளேயே நினைத்துக் கொண்டவன் கண் களை லேசாக மூடிக் கொண்டான்.

அம்மாவின் முகம் தான் கண் முன்னே வந்து நின்றது.

காலையில் புறப்படும் போதே அம்மா சொன்னாள். வேண்டாம் ரிஷி காலம் நல்லாயில்லை. ரமணாவைப் பார்க்க வேண்டுமென்றால் பிறகொரு நாளில் போகலாம். எனக்கென்னமோ மனசு ஒரு மாதிரியாயிருக்குப்பா... தாய் கெஞ்சினாள்.

இல்லம்மா 'கம்பஸ்' தொடங்க மூன்று நாள் தான் கிடக்குது. என் நோட்ஸ் புக்ஸ்செல்லாம் ரமணன் கிட்டக் கொடுத்த நான். வாங்கிற்று சீக்கிரம் வந்திடுவேம்மா. அவன் சொல்லியதும் அம்மா அரைமன தோடு தான் அவனை அனுப்பிவைத்தாள்.

அம்மாவின் பேச்சைக் கேட்காமல் வந்து விட்டோமேயென்று அவன் மீதே அவனுக்குக் கோபம் வந்தது.

தன் விதியை எண்ணித் தனக்குள்ளேயே கலங்கிக் கொண்டிருந்தவனுக்கு உடம்பெல்லாம் வலியெடுக்கத் தொடங்கியது.

இந்த நரகத்துக்குள் வந்த நேரம் தொடக்கம் அவன் வாங்கிய அடி உதை ஆக்கினைகள் தான் கொஞ்சநஞ்சமா?

திட்டுத்திட்டாக இரத்தம் வடிந்து உறைந்து வீங்கிப்போய் கிடந்த கையையும், காலையும் அவன் லேசாகத் தடவிக் கொடுத்தான்... வலி 'சுள்'ளென்று உறைத்தது. வெளியே தெருநாய்கள் பலமாகக் குரைக்க.... தூரத்தேயெங்கோ வெடிச் சத்தங்கள் பலமாகக் கேட்கத் தொடங்கியது. பயத்தில் தன் இரண்டு கைகளையும் நெஞ்சுக்குக் குறுக்கே கட்டிக் கொண்டு கண்களை இறுக மூடிக்கொண்டவன் அப்படியே உறங்கிப் போனான்.

விடியற்காலை மூன்று மணியிருக்கும் யாரோ பயங்கரமாக அலறும் சத்தமும் அதைத் தொடர்ந்து ஒரு வெடிச்சத்தமும் கேட்டது.... ரிஷி துடித்துப் பதைத்துக் கொண்டு எழும்பினான்.

அந்தக்காலை நேரத்திலும் அவனுக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. அடுத்து என்ன நடக்குமோ என்ற கவலை விடியும் வரை அவனுக்குத் தூக்கமே வரவில்லை.

உள்ளே வந்த படைவீரன் ஒருவன் என்னமோ தன் பாஷையால் கத்திவிட்டுச் சென்றான்.

ரிஷி முகத்தைக் கழுவிவிட்டு மறுபடியும் அந்தச் சின்ன அறைக்குள் முடங்கிக் கொண்டான். காலை எட்டு மணிதான் ஆகியிருக்கும் இருவர் வந்து அவனை அழைத்துச் சென்றனர்.

பலவிதமான எண்ணங்கள் மூளையைக் குழப்ப... நிமிர்ந்து பார்த்தான்.... அவனைப் போல் நாலுபேர் விசாரணைக்காக அழைத்து வரப்பட்டிருந்தனர். நெஞ்சு படபடக்கத் தொங்கியது. ஒவ்வொருவராக பெரியவனிடம் விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்பட்டனர். ஒரு ஆளை சுமார் அரைமணி நேரமாவது விசாரணை செய்வார்கள் போலும். முன் வழியால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள்... பின் வழியால் கூட்டிச் செல்லப்பட்டிருக்க வேணும். உள்ளே சென்ற எவரும் இதுவரை வெளியே வரவில்லையென்பதில் ரிஷிக்குச் சந்தேகம் வலுத்துக் கொண்டது. இப்போது ரிஷியின் நேரம். ஏஸி பொருத்தப்பட்ட றூமில், சுழல் நாற்காலியில் - கறுப்புக் கண்ணாடி அணிந்த அந்த மேலதிகாரி கடுகடுப்பில்லாத முகத்தோடு கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

நாற்பத்தைந்து வயதுக்குள் மதிக்கத்தக்க இளமைத் தோற்றம் பயத்தில் உடல் நடுங்க லேசாக அவனைப் பார்த்த ரிஷி.... மேசையை நோக்கினான்.

ஜனக பெரேரா.... தங்க நிறத் தகட்டில் கறுப்பு நிற எழுத்துக்களால் அவன் பெயரும், பதவியும் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருந்தது.

அவனை மீண்டும் பார்க்கத் தைரியமில்லாமல் தவித்த போது தான். ஹலோ.... லுக் ஹியர் என்றான் அவன். ரிஷி பவ்வியமாக தலை நிமிர்ந்தான். அதற்குள் அவனை உள்ளேஅழைத்து வந்தவன். "சார் மெயா கமட்ட அழு ஈயே. போம்பே பிப்பிரின கொட்ட

**மாரதிகே துவகன கிட்டியா மெயாவ சக்கபிட்டிங் அத்தடங்கிவட்டஹத்தா"** (சார் இவன் இந்த ஊருக்குப் புதியவன் நேற்று குண்டு வெடித்தபோது இவன் மெயின் ரோட்டால் ஓடிக்கொண்டிருந்தான். சந்தேகத்தின் பேரில் கொண்டு வந்துள்ளோம்.) என்று சிங்களத்தில் மளமள வென்று சொல்லி 'சல்லியூட்' அடித்தபடியே பின்னால் நகர்ந்து கொண்டான்.

அவன் பேசியது ரிஷிக்கு அரைகுறையாகத் தான் விளங்கியது. ஆனால் ஜனக பெரேராவின் முகம் தான் கடுமையாகியது. ஏய்... சிங்கள கத்தாக்கரண்ட புளுவான்த? (சிங்களம் பேச முடியுமா?) இல்ல சார்... என்றான் ரிஷி. இங்கிலிஸ்...?இல்ல சார் கொஞ்சம் முடியும். சரி தமிழ் பேசுவோமா?

அவன் பேசிய தமிழைக் கேட்டதும் ரிஷியின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.... இத்தனை அழகாகத் தமிழ் பேசுகிறானே. மனசுக்குள் நினைத்தவன் சரி சார் என்றான் பவ்வியமாக. என்ன சத்தம் ரொம்பக் கம்மியாயிருக்கு. சாப்பிடல்லையா? ரீகுடிக்கலையா? ரிஷி மௌனமாக அவனைப் பார்த்தான். அவனோட பார்வையும், விசாரிப்பு அணுகுமுறையும் அவனுக்கு நன்றாகப் பிடித்துப் போயிற்று. இதனால் அவன் மேல் இருந்த பயமும் காணாமல் போய்விட்டது போல் அவனுக்குள் ஒரு வித பிரமை ஏற்பட்டது. ஆமா... உன் பேரென்ன? ரிஷிவர்மன் சார்.... ச்....ச்....ச்....சூ... ரிஷிவர்மன்... அழகான பெயரப்பா.... அப்பா, அம்மா படிச்சவங்களா...? ரெண்டு பேரும் ரீச்சராக இருந்தவங்க சார். நினைச்சேன்... உன் ஊர் எது...? பழந்தோட்டம் சார்.... பழந்தோட்டம்.... தலையை ஆட்டியவன். ரிஷி நீ எதுக்காக இந்த ஊருக்கு வந்தாய்? குண்டு வைக்கவா?

நான் யூனிவர்சிற்றி பெஸ்ட்இயர் ஸ்ருடன்ட் சார். இங்க என் பிரண்ட்கிட்ட என் நோட்ஸ் புக்கை வாங்கிக்கொள்ள வந்தேன்.... அப்பதான் சேர் என்னைக் கைது பண்ணிட்டாங்க. நீ... எந்த கம்பஸ் மாணவன்? பெரதெனியா சார். எந்தப் பக்கியூலிட்டி? மெடிக்கல் சார். ஆமா... அப்போ எதுக்காகக் குண்டு வைத்தாய்? ரிஷி அதிர்ந்து போனான். எல்லாம் ஒரு கணம் தான். எப்படியோ தன்னைச் சுதாகரித்துக்கொண்டவன்... சத்தியமாய்ச் சார்... அப்படி எதுவுமே நான் பண்ணல்ல சார். ஜனக பெரேரா ரிஷியை ஆழமாகப் பார்த்தான். நான் நம்பலாமா? எப்படி நம்புறது? என்னை நம்புங்கள் சார். இதே ஊரில தான் என் நண்பன் சிவதாசன்... நம்பர் பதினேழு, உடையார் வீதியில் இருக்கிறான்... அவனைக் கேளுங்கள் சார்.... ரிஷி... கெஞ்சும்போது அழுதுவிட்டான்.

பழந்தோட்டந்தான் உன் சொந்த ஊரா? பெரியவன் மறுபடியும் கேட்டான். ஆமா சார் என் சொந்த ஊர் அதுதான். உங்கப்பா, அம்மா பெயர் என்ன? அப்பா சிவசேகரம், அம்மா சத்திய சுந்தரி. ஜனக பேரேராவின் முகத்தில் திடீரென்று ஒருவித மாறுதல் எற்பட்டது... எதையோ பலமாக யோசிப்பது போல் இருந்தவன். சரி உன் முகவரியை இதிலே எழுதிவிட்டு நீ போகலாம்.

அவன் சொல்லியதும் ரிஷியால் நம்பவே முடியவில்லை... இந்தக் குகைக்குள் வந்து இவ்வளவு சீக்கிரம் விடுதலை கிடைக்குமென்று அவன்

கனவில்கூட நினைக்கவில்லை... எங்கோ ஒரு சிறைச்சாலைக்குள் முடங்கப் போகிறோமே என்று தான் அவன் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். எனவே சந்தோசத்தில் நன்றி சார்... நன்றி சார்... என்று ஒன்றுக்குரெண்டு முறையாகச் சொல்லியபடியே வெளியேற முயன்றவனை.... ஏய் நில்லு... என்றான் மறுபடியும். கடவுளே இது என்ன சோதனை நாக்கு வரண்டு போக, இதயம் படபட என்று அடித்துக்கொள்ள அந்த இடத்திலேயே ஸ்தம்பித்து நின்றவன். சார்.... என்று மெதுவாக இருந்தான்.

உண்மையாகத்தானே சொல்லுகிறாய்? இந்தக் குண்டுப் பிரச்சினையில் உனக்குச் சம்பந்தமில்லை தானே... சத்தியமா சார், என்னை நம்புங்க அம்மா மேலே சத்தியம் எனக்கு எதுவுமே.... கேற்றுக்கு வெளியே ஒரு ஜீப் வண்டி நிற்க வாசலில் இரண்டு பேர்... பார்ப்பதற்குப் பொலீஸ் அதிகாரிகள் போல் தெரியவே சுந்தரிக்குப் பயமாக இருந்தது.

ஆனாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டவளாய்... வாங்க ஐயா... என்ன வேணும் என்றாள் ரிஷியின் அம்மா. ஒண்ணுமில்லம்மா சீதாலக்ஷ்மி அம்மா வீடு இதானே... இப்ப அவங்க இருக்காங்களோ? ஆமா இருக்காங்க நீங்கயாருன்னு சொல்லவில்லையே....

சொல்றேம்மா முதல்ல நான் அவங்களைப் பார்க்கணுமே வந்தவர்களில் ஒருவன் வார்த்தையை பவ்யமாகப் பேசினான். அவனை எங்கேயோ பார்த்த மாதிரி ஒரு உணர்வு சுந்தரியின் அடிமனதில் வந்து போனது.

சீதாலக்ஷ்மி அம்மா என் அம்மாதான் சார்... ஆனா அவங்க கொஞ்சம் சுகமில்லாமல் படுக்கையில் இருக்கிறாங்க.... உள்ள வாங்க என்று அழைத்துச் சென்றாள். அவர்களைக் கண்டதும் சீதாலக்ஷ்மி அம்மாள் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்... அறுபத்தைந்து வயது மதிக்கத்தக்க அந்தப் பெண் மணியைக் கண்டதும் அம்மா... நான் பெரேரா வந்திருக்கேம்மா... ஞாபகம் இருக்காம்மா.... என்று அவள் கைகளைப் பற்றிக் கொண்டு கேட்டான் வந்தவர்களில் ஒருவன்.

சீதாலக்ஷ்மி அம்மாள் மறக்கவில்லை போலும்.... பெரேரா தம்பி எப்படிப்பா இருக்கே. அம்மா, தாத்தா, நங்கீ எல்லோரும் ஊரில சுகமாயிருக்காங்களாப்பா அவனைத் தடவிக் கொடுத்தபடியே கேட்கத் தொடங்கினாள் அவள்.

எல்லோரும் சுகமாயிருக்கிறார்களம்மா. ஆனா தாத்தாதான் மோசம் போயிட்டார். நாட்டுப்பிரச்சினை காரணமாக நாம ஒருத்தரோட ஒருத்தர் சந்தித்துப் பழக வாய்ப்பில்லை எங்கிறது தாம்மா கவலை. ஆமா அங்கிள் சுகமாயிருக்கிறாரா என வினவினான்.

சீதாலக்ஷ்மி அம்மாவின் கண்கள் கசியத் தொடங்கியது. அவர் போய் ஆறு வருசமாச்சப்பா. எனக்குத்தான் மூட்டுவாத நோய் நடக்க முடியாது என்று சொல்லியபடியே சுந்தரி சத்திய சுந்தரி என்று மகளை அழைக்கத் தொடங்கினாள்.

சுந்தரி கொண்டு வந்த 'டீக்' கோப்பைகளை ஸ்ரூலில் வைத்துவிட்டு என்னம்மா என்று கேட்டாள் தாயிடம். இந்தா சுந்தரி. நம்ம வீட்டில முன்றூமில் இருந்த பெரேராத் தம்பியைப் பார்த்தாயா? மதிக்கவே முடியாம எப்படி வளர்ந்திருக்கிறார் பார்த்தியா என்றாள் தாய். ஓ! பெரேரா... கேகாலை அவர்தானே. நீங்க? ஞாபகமிருக்

காம்மா... நல்லா ஞாபகமிருக்கு.... பொலீஸ் ஓ.ஐ.சீயாக இருந்தீங்கதானே.... நினைச் சேன் எங்கேயோ கண்ட ஞாபகம் அடிக்கடி வந்தது.

இப்ப எங்க இருக்கிறீங்க சார்? உங்களைப் பார்த்ததில் எவவளவு சந்தோசமாயிருக்கு தெரியுமா? சுந்தரி தான் சொன்னாள். பரவாயில்லை ரீச்சர் நான் இங்கதானே வேலை பார்க்கிறன். உங்களையெல்லாம் பார்த்ததிலே எனக்கு ரொம்ப சந்தோஷமம்மத. சரி... எனக்கு டைமில்லை.... டைம் கிடைக்கிறப்போ வர்ரன்... சொல்லிய படியே புறப்படத்தயாரா னான் அவன். சரிப்பா சுகமாயிரு, கவனமாகப் போயிட்டு வா. ஆமா நீ என் பேரப்பிள்ளைகளைப் பார்க்கல்லையே சுந்தரி துளசியையும், பையனையும் தம்பிக்கு அழைச்சிட்டு வந்து காட்டம்மா என்றாள்.

சார் இவ பொண்ணு துளசி ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறா. ரிஷி இங்க வாப்பா என்று அழைக்கும் போதே வேண்டாம்மா அப்புறம் பார்க்கலாம் என்று சொல்லியபடியே வெளியேறினான் அந்தப் பெரியவன்.

சுந்தரிக்கு நெஞ்சு நிறைந்து போனது. அப்போதுதான் அம்மா இந்தாள் சாதாரணமான ஆளில்லம்மா ஒரு எஸ்.ரீ.எவ் விசேட அதிரடிப்படை முகா முக்கே பெரியவனம்மா. என்னை விசாரித்து விடுதலை செய்தது கூட இந்தப் புண்ணியவான்தானம்மா என்றான் ரிஷி.

சுந்தரி நன்றியாய் கண்களைத் துடைத்துக் கொண்டாள். ரிஷி... அந்த நாள்ல நம்ம ஊர்ப் பொலீஸ் நிலையத்தில் இந்தத் தம்பிதாண்டா பொறுப்பதிகாரியாக வேலை பார்த்தான்.

ரொம்ப அருமையான பையன், குணத்திலே தங்கம் - குவாட்டஸில் இருக்கப் பிடிக்காம எங்க வீட்டிலதான் தங்கி இருந்தான். சரியான கஷ்டப்பட்ட குடும்பத்துப் பையன் - தன் குடும்ப நிலையைக் கூட, ஒழிவு மறைவில்லாமல் சொல்லுவான். யாருக்குமே எந்தப் பிரச்சினையும் கொடுக்காமல் தானுண்டு தன் வேலை யுண்டு என்றிருப்பான். உங்க தாத்தாகிட்ட தான் இங்கிலிசும், தமிழும் கத்துக்கிட்டான். மூன்று நேரமும் நம்ம வீட்டுச் சாப்பாடு தான். சம்பளம் எடுத்ததும் முதல்ல சாப்பாட்டுக் காசைக் கொண்டு வந்து தந்திடுவான். உங்க தாத்தா என்ன சொல்லுவார் தெரியுமா பெரேராத்தம்பி.... ஆம்பிளைப் பிள்ளை இல்லாத எனக்கு நீதான் மகன்... என் பிள்ளை கிட்ட நான் பணம் வாங்கலாமாப்பா சொல்லு... என்று அவனைச் சமாதானப் படுத்திடுவார்.

அப்படி ஒன்றாய் வாழ்ந்த பையன். நல்லாயிருக்க வேணும்... என்று மனம் விட்டு வாழ்த்தினாள்.


அந்த தர்மந்தான் இன்றைக்கு என் பிள்ளையைக் காத்திருக்கிறது. சுந்தரி மனசுக்குள்ளேயே நினைத்துக்கொண்டாள். கடவுளே இவனைப்போல ஆயிரம் பெரேராக்கள் உருவாக வேண்டும். அப்போது தான் இந்த நாட்டுக்கு மீட்சி கிடைக்கும்.... திடமாக நம்பிக்கொண்டு மனமாரப் பிராத்தித்தாள் அவள்.

(யாவும் கற்பனை)

நன்றி

- எழுவான் -

# இணையத்தில் பதிவிறக்க வேகத்தை அதிகப்படுத்த...





அகல்கற்றை போன்றவை களின் வழியாக இணைய இணைப்பை பெற்றாலும், கோப்புகளை பதிவிறக்கம் செய்தல் போன்ற பணியின்போது மிகவும் மெதுவாகி நமக்கு அதிக வெறுப்பு ஏற்படும் அளவிற்கு நம்முடைய பொறுமையை பரிசோதிக்கும் நிலையை ஏற்படுத்துகின்றது.

இதனை தவிர்ப்பதற்காக உடனே தரமான செயல் வேகம்மிக்க கிராஃபிக் கார்டு அதிவேக ரேம் மற்றும் ப்ராசசர் போன்றவை கணினியில் மாற்றியமைக்க வேண்டும் என பட்டியலிடுவேன் என தவறாக எண்ணி விடாதீர்கள். இங்கு நான் கூறப்போவது முழுக்க முழுக்க மென் பொருள் சார்ந்தது.

மேலும் சரியான இணைய இணைப்பை வழங்கும் நிறுவனத்திற்கு மாறிக்கொள்ளுங்கள் என்று கூறுவதற்கும் நாம் விழையவில்லை. ஆயினும் போதுமான அளவிற்கு TCP/IP அமைப்பையும் விண்டோவினுடைய ரெஜிஸ்டரியையும் மாற்றியமைக்க வேண்டியிருக்கும். ஆனால் தவறான ரெஜிஸ்டரின் உள்ளீட்டால் கணினி சரியாக இயங்கமுடியாது போய் விடும். இவ்வாறான சிக்கல்கள் இல்லாமல் இணைய இணைப்பை பயன்படுத்து வதற்காக SG TCP optimizer என்ற இலவச பயன்பாட்டுக் கருவி உங்களுக்கு உதவ தயாராக உள்ளது.

இது இணைய இணைப்பை வேகப்படுத்துவதற்காக தூண்டி விடுதல் விண்டோவினுடைய ரெஜிஸ்டரியை மாற்றியமைத்தல் போன்ற பல்வேறு பணிகளை மிக எளிதாக செய்கின்றது. 600KB அளவுள்ள இந்த மென்பொருளை இலவசமாக www.speedguide.net என்ற வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும். இவ்வாறு பதிவிறக்கம் செய்த மென்பொருளை உங்களுடைய கணணி யில் மட்டும் நிறுவி இயக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அதற்குப் பதிலாக யுஎஸ்பி ட்ரைவில் கூட இதனை நிறுவி செயல்படுத்த முடியும். இதில் உள்ள SG TCP opimizer மற்றும் SG TCP/IP guru ஆகிய இரண்டில் SG TCP opimizer என்பதை மட்டும் இதற்காக தெரிவு செய்க. இது பாதுகாப்பானது நாம் எதிர்பார்க்கும் நல்ல விளைவு இதிலிருந்து நமக்குக் கிடைக்கும். இந்தக் கருவியை இங்கு செயற்படுத்தும் போது TCP, Windowsize, MTU,MSS,TTL என்பன போன்ற பல்வேறு பராமீட்டர்களை மாற்றியமைக்கும் கடினமான பணியை செய்யும் படியும் இங்கு கூறவில்லை.

இதனை செயல்படுத்தும் முன்பு இணையத்தில் பயன்படுத்திக் கொண்டிருக்



கும் web browser, instant messanger,p2p,p2p client என்பன போன்ற அனைத்துப் பயன்பாடுகளின் இயக்கத்தையும் முதலில் நிறுத்தம் செய்து விடுக. www.speedguide.net/ என்ற தளத்திற்குச் சென்று உங்களுடைய இணைய இணைப்பில் பதிவிறக்க வேகத்தை speedtest என்ற பகுதியில் பார்த்துக் குறித்துக் கொள்க. பின்னர் SG TCP opimizer (windows xp) என்ற விண்டோவினை திறந்து அதில் நாம் ஏற்கனவே குறித்து வைத்த வேகத்தை விட கூடுதலாக இதிலுள்ள நகரும் அம்புக் குறியை பிடித்து தேவையான அளவிற்கு அமைத்துக் கொள்க.

அதன் மூலம் கீழிறங்கு பட்டியலின் மூலம் பொருத்தமான நெட்வொர்க் அடாப்டரை தெரிவு செய்து கொண்டு optimal settings என்பதின் ரேடியோ பொத்தானை தெரிவு செய்து கொள்க.

பின்னர் backup என்ற பட்டன் தெரிவு செய்யப்பட்டுள்ளதா என சரி பாரித்துக் கொள்க. அதன் பின்னர் apply என்ற பொத்தானை தொடுக்குக. பின்னர் தோன்றும் திரையில் நாம் செய்த மாறுதல்கள் சரியாக இருக்கின்றனவா என சரிபார்த்துக் கொள்க.

உடன் would you like to reboot for changes to take effect/? என்ற செய்திப் பெட்டியொன்று திரையில் தோன்றும். அதில் yes என்ற பட்டினை தொடுக்குக. உடன் கணினி இயக்கம் நிறுத்தம் செய்யப்பட்டு மீண்டும் இயங்கத் தொடங்கும். இப்போது இணைய தளத்தில் உங்களுடைய பதிவிறக்க வேகத்தை சரிபார்க்கவும். நாம் அமைத்தவாறு மாறி இருப்பதைக் காணலாம்.

***நன்றி - தமிழ் கம்யூட்டர்***

# 2016 ஒலிம்பிக்குக் கண் வைக்கும் அமெரிக்கா!

விளையாட்டு

தயாரிப்பு : கரன் அண்ணா

ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தி அதில் பெருமை காணவும் தமது நாட்டின் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பொருளாதார நிலைகள் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் என்பவற்றை வெளி உலகத்திற்கு காட்டிவிட பல நாடுகள் முண்டியடித்த வண்ணம் உள்ளன. அந்த வகையில் கடந்த 2008 சீன ஒலிம்பிக்கில் அடுத்த 2012 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக்கை நடத்த நடந்த வாக்கெடுப்பில் பிரித்தானியா வென்று ஒலிம்பிக்கை நடத்துவதற்கான தயாரிப்பு வேலைகளில் மும்முரமாக உள்ளது.


இன்னும் 2012 ஒலிம்பிக் போட்டிக்கு அண்ணளவாக 3 வருடங்கள் உள்ள நிலையில் அதாவது 2012.07.24 அடுத்த ஒலிம்பிக் தொடங்க இன்னும் 1150இற்கு மேற்பட்ட நாட்கள் உள்ள நிலையில் 2016 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக்கை நடத்த அதாவது 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக்குக்கான அனுமதியைப் பெற்று விட அமெரிக்கா தீவிரமாக முனைந்து வருகின்றது.

1996 ஆம் ஆண்டுக்கான அற்லாண்டா ஒலிம்பிக்கின் பின்னர் 2016 இல் மீண்டும் ஒலிம்பிக்கை தனது நாட்டில் நடத்தி விட வேண்டும் என்பதில் ஒபாமாவும் குறியாகவேயுள்ளார்.

ஏற்கனவே சர்வதேச ஒலிம்பிக் சங்க உறுப்பினர்களை இஸ்தான் புல்லில் சந்தித்து பேசிய ஒபாமா தற்போது மீண்டும் ஒரு ஒலிநாடா மூலம் ஒலிம்பிக்கை நடாத்துவதற்கான அனுமதியை கோரியுள் ளார். இதைத்தவிர சிக்காக்கோ மட்றிட், றியோ டி ஜெனாறியோ மற்றும் ரோக்கியோவில் உள்ள தனது பிரதிநிதிகள் மூலமும் ஆபிரிக்காவின் அபுஜாவில் நடைபெறவுள்ள சர்வதேச ஒலிம்பிக் சபையின் கூட்டத்தில் தாம் ஏன் ஒலிம்பிக்கை நடத்த விரும்புவதாக விளக்கங்களைக் கூறவுள்ளது. வரும் ஒக்டோபர் 2ம் திகதி நடைபெறவுள்ள 2016 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தும் நாட்டை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்புக்கு முன்னர் அனைத்து வகையான பரப்புரைகளையும் நாடுகள் நிறைவு செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் கொபென் காகனில் நடைபெறவுள்ள சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் வாக்கெடுப்பில் பிரேசில், ஸ்பெயின், ஜப்பான் போன்ற நாட்டுத் தலைவர்கள் பங்குபற்றவுள்ள நிலையில் ஒபாமாவும் பங்குபற்றுவாரா என்னும் கேள்வி எழுந்துள்ளது. இதேவேளை பிரேசிலின் பிரதமர் கருத்து வெளியிடுகையில் தொடர்ந்தும் பணக்கார நாடுகள் இப்போட்டிகளை நடத்த அனுமதிக்க முடியாது. தென்ன மெரிக்காவும் போட்டிகளை நடத்தும் சந்தர்ப்பம் முதல் முதலாக என்னால் பெற்றுக் கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளனர். எனினும் 5 கண்டங் களைச் சேர்ந்த 107 உறுப்பினர் களுக்கிடையே நடைபெறும் பரப்புரைகள் வாக்கெடுப்புகள் யார் 2016 ஆம் ஒலிம்பிக்கை நடத்துவார் என்பதைத் தீர்மானிக்கும்.

மட்டுநகரில்..........

- Spoken English
- பாடசாலை மாணவர்களுக்கான நாடகமும், அரங்கியலும் தமிழ், கணிதம், சுற்றாடல்சார் செயற்பாடு, சமயம், விஞ்ஞானம், விவசாயம் போன்ற பாடங்களுக்கான வினா விடைகள்.




- சிறுவர்களுக்கான கதைப்புத்தகங்கள்.
- தெனாலிராமன் கதைகள்.
- பரமார்த்த குரு கதைகள்.
- பகவத் கீதை.



- சமையலறைக் குறிப்புகள்.
- சமயம் சம்பந்தமான புத்தகங்கள்.
- பரிசுப் பொருட்கள்.

**போன்றவற்றை ஒரே கூரையின் கீழ் தெரிவு செய்து கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.**

# அகரம் புத்தகசாலை

82, பார் வீதி,
மட்டக்களப்பு.

F/0006

சஞ்சிகைப் பதிவு இலக்கம் - 361910


Life's Good

LG

# LG Abans Show Room

LG, JVC, HAIER, HOOVER, ELECTROLUX,
TOYOSTAR, JAIPAN.....EXT
[சின்ன ஆஸ்பத்திரிக்கு முன்பாக]

- குளிர்சாதனப் பெட்டி
- தொலைக்காட்சிப் பெட்டி
- சலவை இயந்திரம்
- மைக்ரோ வேவ்
- குளிரூட்டி மற்றும் பல.......



தொடர்புகட்கு
175, Trinco Road
Batticaloa.
T.P/FAX:- 065-2226988

AD/0020

வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.